# திருக்கல்யாணத்தாய்

மலர் : 6 இதழ் :4 ஏப்ரல் 2015 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukalyanamata.com



# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு முனைவர் R. **ஜோசப் ரவிபாலன்**


**ஆலோசகர் குழு**

அருட்திரு ஜாண் போஸ்கோ

அருட்திருசிலுவை தங்கம்

அருட்திரு டென்சில் ராஜா

அருட்திரு ஜோசப் ஸ்டார்லின்

அருட்திரு ஜோசப் பாக்கியராஜா

அருட்சகோதரி புளோரா

**ஆசிரியர் குழு**

அருட்திரு பிரான்சிஸ் வசந்தன்

அருட் சகோதரி மைக்கிள்

திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்

திரு. அந்தோணி ஜெயராஜ்

திரு. பெலிக்ஸ் அந்தோனி

திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா

திருமதி. ரெவின்யூஸ் ராணி

திரு. மெசியாஸ்



**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்

திருக்கல்யாணத்தாய் திருத்தலம்

பொத்தக்காலன்விளை 628 702

தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு

தொலைபேசி : 04639 - 261230



**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330

திருத்தல அலுவலகம் : 04639 -261430


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் | 7 |
| மன்னிப்பின் மாண்பு | 9 |
| இவரே இயேசு | 12 |
| திருச்சபைச் செய்திகள் | 13 |
| அறிவிப்பு | 16 |
| அற்புதங்கள சாட்சிகள் | 18 |
| எனது கிராமம் | 20 |
| ஈஸ்டர் | 22 |
| பின் பற்றலாமே! | 28 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 31 |
| விவிலிய வினா விடை | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

விளம்பரம் முழுபக்கம் கருப்பு வெள்ளை - ரூ 1000, கலர் - ரூ 3000



# ஆசிரியரின் அருளுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! இந்த ஏப்ரல் மாதத்தின் முக்கிய நிகழ்வு என்ன என்று கேட்டால், அதற்கு எளிதில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் பெருவிழா என்கிற ஒரே பதிலை யாரும் சொல்லி விடுவார். உண்மையில் இயேசுவின் உயிர்ப்பு ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இயேசுவின் உயிர்ப்பின் மேன்மையை அறிவிக்கிறபோது, "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி15:14) என்று புனித பவுல் மிக அழகாக குறிப்பிடுகிறார். திருச்சபையின் தொடக்கக்காலத்தின் அடிப்படைப்பறைசாற்றுதல் இயேசுவின் இறப்பு உயிர்ப்பு குறித்துதான் என்பதற்கு விவிலிய சான்றுகள் இருக்கின்றன (திப 2:22-24, 36; 3:15; 4:10; 10:39-40).

இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிய நம்பிக்கை இல்லையெனில் கிறிஸ்தவ மதமே இல்லை என்று சொன்னால் அது மிகையல்ல. இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி ஏதென்சு நகரத்துக்கிரேக்க அறிஞர்களிடம் புனித பவுல் அறிவித்தபோது, சிலர் அவரைக் கேலி செய்தனர்; வேறு சிலர் அதுபற்றி இன்னும் அறிந்து கொள்ள விரும்பினர்; ஒரு சிலரே அதை நம்பி ஏற்றனர் (திப17:22-34). இயேசுவின் உயிர்ப்பிற்கு முன் மானிட உடல் உயிர்ப்புப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. ஆகவே அந்த உண்மை எடுத்துக்கூறப்பட்டபோது, அதைக் கேட்டவர்கள் அதிர்ந்தார்கள்; புரிந்துகொள்ள முடியாமல் தவித்தார்கள். இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து, அவரது போதனைகளை அடிக்கடி அருகிலிருந்து கேட்டு, அவர் ஆற்றிய அற்புதங்களையெல்லாம் கண்டிருந்த அவரது திருத்தூதர்களும் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி முதல் முறையாகக் கேட்டபோது, உடனே அதை நம்பிவிடவில்லை. இயேசு உயிர்த்துவிட்டார் என்கிற செய்தியை பெண்கள் திருத்தூதர்களிடம் கூறியபோது, அச்செய்தி அவர்களுக்கு வெறும் பிதற்றலாகத் தோன்றியது. அவர்கள் உடனே அதை நம்பிவிடவில்லை (லூக் 24:11). எம்மாவுக்குச் சென்றுகொண்டிருந்த இரண்டு சீடர்கள் உயிர்த்த இயேசுவை அடையாளம் காண முடியாமல் அவரிடமே அவரது உயிர்ப்பைப் பற்றி தாங்கள் அறிந்ததைத் தெரிவித்தபோது, அவர்கள் இயேசுவின் உயிர்ப்பை நம்பியதற்கான அடையாளம் எதுவுமில்லை (லூக்24:19-24). இயேசு உயிர்த்ததைப்பற்றி மற்ற திருத்தூதர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், தோமா மிகவும் பிடிவாதத்துடன் அதை ஏற்க மறுத்தார் (யோவா 20:25).

இயேசுவின் உடல் உயிர்ப்பின் பொருள் என்ன? அது நமக்குக் கூறும் செய்தி என்ன? இயேசுவின் உடல் உயிர்ப்புப் பற்றிப் பேசும்போது, ஜெர்மனி நாட்டின் புகழ்பெற்ற விவிலிய அறிஞர் ருடால்ஃப் புல்ட்மான் (1884-1976) மாறுபட்டக் கருத்தை வழங்குகிறார். அவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவரல்ல; கிறிஸ்தவத்தின் வேறொரு சபையைச் சேர்ந்தவர். அவரது கருத்தின்படி, இயேசு உடலின் உயிர்ப்பைப் பெறவில்லை; மாறாக, கிறிஸ்தவ

இயக்கத்தின் போதனைகளிலும், படிப்பினைகளிலும் இயேசு கூறியவை நினைத்துப் பார்க்கப்படுகிற வேளையில் அவர் உயிர்த்தெழுகிறார் உலகத்தில் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், பல துறைகளில் சாதித்தவர்கள் அடிக்கடி பலராலும் நினைத்துப் பார்க்கப்படுகிறார்கள். அப்பொழுது அவர்கள் சாதித்தவை மக்களின் மனக்கண் முன் வந்து நிற்கிறது. அதைப்போலவே இயேசுவின் போதனைகளும், சாதனைகளும் கிறிஸ்தவப் போதனைகளில் நினைத்துப்பார்க்கப்பட்டு, எடுத்துரைக்கப்படும்போது, இயேசுவும் உயிர்த்தெழுகிறார். புல்ட்மானின் இந்தக் கருத்து நம் மனதை மிகவும் கவரக்கூடிய விதத்தில் இருந்தாலும், கத்தோலிக்க விவிலிய அறிஞர்கள் இதை உதறித் தள்ளிவிடுகின்றனர். புல்ட்மானின் கருத்தின் அடிப்படையில் பார்த்தால் இயேசுவுக்கும் உலகின் பல்வேறு சாதனையாளர்களுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை என்றாகி விடுகிறது. கத்தோலிக்கத் திருச்சபையின் நம்பிக்கையின் அடிப்படையில், இயேசு கிறிஸ்து உண்மையிலேயே உடலோடு உயிர்த்தெழுந்தார் என்கிற உண்மை உயர்ந்து நிற்கிறது. புனித பவுல் இயேசுவே "முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார்" (1கொரி 15:20) என்கிறார்.

இயேசுவின் உயிர்ப்பிற்கு விண்ணகமே சாட்சி சொன்னதாக நற்செய்தி நூல்கள் கூறுகின்றன. இயேசுவின் கல்லறை அவரது அடக்கத்துக்குப்பின் மூன்றாம் நாளில் வெறுமையாய் இருந்ததால் இயேசு உயிர்த்து விட்டார் என்று சொல்வது சரியாக இருக்க முடியாது. வெற்றுக் கல்லறைதான் இயேசுவின் உயிர்ப்பிற்கு சிறந்த சாட்சி என்று சொல்ல முடியாது. ஆனால் அதற்கு மாறாக, திறக்கப்பட்டிருந்த கல்லறை என்று சொன்னால் அது சரியாக இருக்கும் என்பது பல அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது. ஒரு கல்லறை பல விதங்களில் வெறுமையாக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, இயேசுவின் உயிர்ப்பை ஏற்காத யூதத் தலைவர்கள் காவல் வீரர்களுக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்த போது, இயேசுவின் உடலை அவரது சீடர்கள் திருடிச் சென்றுவிட்டனர் என்று மக்களிடம் சொல்லுமாறு அவர்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் மூலம் வதந்தியைப் பரப்பி விட்டனர் (மத் 28:11-15; காண்க. மத் 27:62-66); மேலும் மகதலா மரியா கல்லறையில் இயேசுவின் உடலைக் காணாதபோது, யாரோ அதை எடுத்துச் சென்றிருக்கலாம் என்றுதான் நினைத்தார் (யோவா 20:11-15). ஆகவே கல்லறை வெறுமையாய் இருந்தது என்கிற காரணத்தால் மட்டும் இயேசு உயிர்த்து விட்டார் என்று சொல்வது சரியாக இருக்காது. வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் கல்லறைக்குச் சென்றபோது, கல்லறை திறக்கப்பட்டிருந்தது. திறக்கப்பட்டிருந்த கல்லறையினுள் சென்று பார்த்தபோது அங்கே ஆண்டவரின் தூதர் இயேசு உயிர்த்த செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் (மத் 28:1-7; மாற் 16:1-7). லூக்கா நற்செய்தியில் இரண்டு தூதர்கள் இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சியம் கூறுவதாய்ப் பார்க்கிறோம் (லூக் 24:1-7). திறந்திருந்த கல்லறையில்

ஆண்டவரால் அனுப்பப்பட்ட தூதர் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தக் காரணத்தினால், இயேசுவின் உயிர்ப்பைப்பற்றி சந்தேகம் கொள்வதில் அர்த்தமில்லை.

நான்கு நற்செய்தி நூல்களிலும் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றியக் குறிப்புக்களில் 'வெற்றுக் கல்லறை' என்கிற சொல் காணப்படுகிறது (மத் 28:6; மாற் 16:6; லூக் 24:2; யோவா 20:4-7). புனித பவுல் இயேசுவின் அடக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (1கொரி 15:4; காண்க. உரோ 6:4). இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி அவர் கூறுகின்ற இடங்களில்,'வெற்றுக் கல்லறை குறித்து அவர் எதுவும் சொல்வஸ்தில்லை. அவரைப் பொறுத்தவரை இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிய நம்பிக்கை வெற்றுக் கல்லறையால் தூண்டப்பட்டதல்ல. மாறாக அது உயிர்த்த இயேசு அடிக்கடி கொடுத்தக் காட்சிகளின் மூலம் உருவான நம்பிக்கை என்றுதான் சொல்ல முடியும். உயிர்த்த இயேசு வழங்கிய காட்சிக்குமுன், அவரது கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்புகளில் தான் கைவிட்டுப் பார்த்தால் ஒழிய, அவரது உயிர்ப்பை தான் நம்பப் போவதில்லை என்றார். ஆனால் உயிர்த்த இயேசுவை கண்ணால் கண்டபோது, அவரது தழும்புகளைப் பரிசோதிக்காமல், "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா 20:24-28) என்று சொல்லி, அவரது உயிர்ப்பை நம்பி, அவரிடம் சரணடைந்தார். உயிர்த்த இயேசு கொடுத்தக் காட்சி அவ்வளவு மகத்தானது! இயேசுவின் வெற்றுக் கல்லறையை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம்; ஆனால் உயிர்த்த இயேசு ஒரு சிலருக்கு மட்டும் காட்சிவழங்கினார். அந்த ஒரு சிலரில் பவுலும் உண்டு. பவுல் வெற்றுக் கல்லறையை ஆதாரமாகப் பார்ப்பதற்குப் பதிலாக, உயிர்த்த இயேசு வழங்கியக் காட்சிகளை ஆதாரமாகக் கருதி, தன்னை இயேசுவின் திருத்தூதர் என்று அறிமுகம் செய்துகொள்வதாகப் பார்க்கிறோம்.

இயேசுவின் உயிர்ப்பு கூறும் அடிப்படை உண்மை என்ன? மானிடரின் ஈடேற்றத்திற்காக, இயேசு தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார் (எபி 9:24-26; 10:5-10). புனித பவுல் இயேசுவை "பாஸ்கா ஆடு" (1கொரி 5:7) என்று வருணிக்கிறார். திருமுழுக்கு யோவான் இயேசுவை மக்களுக்கு அறிமுகம் செய்தபோது, அவர் கடவுளின் ஆட்டுக்குட்டி என்றும், அவரே உலகின் பாவங்களைப் போக்குகிறவர் (யோவா 1:29,36) என்றும் கூறுகிறார். இயேசு தம்மையே கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தபோது, விண்ணகத் தந்தை இயேசுவின் பலியை ஏற்றுக்கொண்டதின் அடையாளம்தான் இயேசுவின் உயிர்ப்பு என்று நாம் புரிந்துகொள்ளலாம். இயேசு உயிர்த்தெழுந்திருக்கவில்லையெனில், அவர் வழங்கிய பலி கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று ஆகியிருக்கும் மானிட மீட்புக்காக இயேசு நிறைவேற்றிய ஒப்பு நிகரற்றப்பலியின் நிறைவுதான் அவரது உயிர்ப்பு என்று சொன்னால் அது மிகையாகாது.

உயிர்ப்பைப் பற்றி நாம் பேசுகிறபோது, அடிப்படை உண்மை ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இயேசுவின் இம்மண்ணுலகப் பணி வாழ்வின்போது, அவர் இறந்துபோன மூன்று நபர்களை மீண்டும் இந்த உலகிலே வாழச் செய்தார் என்று நற்செய்தி நூல்களிலிருந்து அறிகிறோம்: நயீன் ஊர்க் கைம்பெண்ணின் ஒரே மகன் (லூக் 7:11-17), தொழுகைக்கூடத் தலைவர் யாயிரின் பன்னிரண்டு வயது மகள் (மத் 9:18-26; மாற் 5:21-43; லூக் 8:40-56) மற்றும் பெத்தானியாவைச் சேர்ந்த இயேசுவின் நெருங்கிய நண்பர் இலாசர் (யோவா 11:1-44). இலாசரைப் பொறுத்தவரை, அவர் இறந்து நான்காம் நாளில் இயேசு அவரைக் கல்லறையிலிருந்து உயிருடன் வெளியே கொண்டு வந்தார் என்றறிகிறோம். இறையியலாளர்கள் உயிர்ப்பைப் பற்றி விளக்கும்போது, இயேசுவின் உயிர்ப்புக்கும் இயேசுவினால் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் பெற்ற அனுபவத்திற்குமிடையே மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதாகக் கூறுகின்றனர். உயிர்ப்பு என்பது 'உடலின் உயிர்ப்பு' (BodilyResurrection) என்றும் 'சதையுடன் உயிர்பெறுதல்' அல்லது 'ஊனுடல் உயிர்ப்பு' (Physical Resurrection) என்றும் இரண்டு விதங்களில் பார்க்கப்படுகிறது. இலாசர், நயீன் ஊர்க் கைம்பெண் மற்றும் யாயிரின் மகள்

ஆகியோர் தங்களின் 'சதை, எலும்பு, இரத்தத்துடன்' உயிர் பெற்றனர். இவர்கள் உயிர்பெற்றபின் சில ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்தார்கள். மற்றவர்களைப் போல உண்டார்கள்,குடித்தார்கள். எல்லா மனிதரும் இறப்பதுபோல சில ஆண்டுகளுக்குப்பின் அவர்களும் இறந்தார்கள்.

இயேசு பெற்றது 'உடலின் உயிர்ப்பு'. இது என்றும் அழியாத நிலை; சாவே இல்லாத நிலை. சாவே இல்லாத நிலையில் இயேசு மகிமைப்படுத்தப்பட்ட உடலைக் கொண்டிருந்தார். மாற்றுரு பெற்றிருந்த இயேசுவைப் பார்த்தவுடனேயே அவரது சீடர்கள் அடையாளம் காண முடியாமல் திணறினர். எம்மாவுக்குச் சென்ற இரண்டு சீடர்கள் அவரை ஒரு வழிப்போக்கர் (லூக் 24:13-30) என்றும், மகதலா மரியா அவரை ஒரு தோட்டக்காரர் என்றும் (யோவா 20:14-15) நினைத்தனர். உயிருடன் எழுப்பப்பட்ட இயேசுவின் உடல் அவரது மண்ணக உடலின் தொடர்ச்சியாகவும், அதே நேரத்தில் முழுவதும் மாற்றுரு பெற்ற உடலாகவும் அறியப் படுகிறது.


இயேசுவின் உயிர்ப்பு மறைபரப்பும் பணிக்கு ஓர் அடித்தளமாய் அமைந்தது. இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி பெண்களுக்கு அறிவித்த ஆண்டவரின் தூதர், அந்த நற்செய்தியை உடனடியாக அவரது சீடர்களுக்கு அறிவிக்குமாறு கூறினார் (மத் 28:7; மாற் 16:7). அந்தப் பெண்கள் உயிர்ப்பின் செய்தியை இயேசுவின் திருத்தூதர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்தனர் (லூக்24:8-9). உயிர்த்த இயேசு மகதலா மரியாவையும் வேறொரு மரியாவையும் சந்தித்து, தம் திருத்தூதர்களை கலிலேயாவுக்குப் போகச் சொல்லுமாறு கூறினார் (மத்28:10). இயேசு விண்ணகம் செல்வதற்குமுன் தம் சீடர்களிடம் மறைபரப்பும் பணியை ஒப்படைப்பதைக் காணலாம் (மத் 28:16-20; மாற் 16:15-18; லூக் 24:44-49; யோவா 20:19-23). இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அவரது உயிர்ப்பை பெருமையாகக் கொண்டாடுவதோடு நின்று விடாமல், அவர் இம்மண்ணுலகில் தொடங்கியப் பணியை நிறைவாக்க வேண்டும் என்பது அவரின் எதிர்பார்ப்பு. இயேசுவின் உயிர்ப்பில் கடவுள் அவரது நற்செய்திப் பணியை (மறைபரப்பும் பணியை) ஏற்று உறுதிசெய்தார் என்கிற உண்மை வெளிப்படுகிறது. உயிர்த்த இயேசுவின் அதிகாரத்தின் அடிப்படையில்தான் அவரது சீடர்கள் தங்களின் மறைபரப்பும் பணியைத் தொடங்க வேண்டியிருந்தது (மத்28:18-19). ஆகவே இயேசுவின் உயிர்ப்பு மறைபரப்பும் பணிக்குமிகச்சிறந்த அடித்தளத்தைஅமைத்துக்கொடுத்தது.இன்னும் சொல்லப்போனால்,

இயேசுவின் உயிர்ப்பே ஓர் அற்புதமான மறைபரப்பும் செயல்தான். இயேசுவின் உயிர்ப்பை மிகச் சிறப்பான முறையில் வலியுறுத்தித்தான் தொடக்ககாலத் திருச்சபையின் போதனை அமைந்தது. இயேசுவின் உயிர்ப்பு என்கிற மகத்தான உண்மையை மீண்டும் மீண்டும் மக்களுக்கு எடுத்துக் கூறி, அது இறைவனின் சாதனை என்பதைச் சுட்டிக்காட்டித்தான் இயேசுவின் சீடர்கள் திருச்சபையை எல்லா திசைகளிலும் பரவச் செய்தனர்.

இயேசுவின் உயிர்ப்பு என்கிற மாபெரும் நிகழ்வு நம் அனைவருக்கும் மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது. இயேசு உயிர்த்தெழுந்து என்றும் வாழ்வதுபோல நாமும் இறுதி நாளில் உயிர் பெற்றெழுந்து, மாற்றுரு பெற்று, மகிமைப்படுத்தப்பட்ட உடலோடும், அழியா ஆன்மாவோடும் என்றும் நிலைத்திருப்போம்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் பெருவிழாவின் இனிய நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

– அருட்திரு முனைவர் **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல் 8

அருட்திரு முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

திருப்பாடல் எட்டு தாவீதின் புகழ்ப்பா. மானிடரை உருவாக்கிய ஆண்டவரைப் புகழ்ந்து பாடுவதாய் இத்திருப்பாடல் அமைந்துள்ளது. உலகைப் படைத்த கடவுளின் மேன்மையையும் மாட்சியையும் புகழ்ந்து பாடும் விதத்தில் இத்திருப்பாடல் இயற்றப்பட்டுள்ளது. இந்தப் பாடலில் தொடக்க நூல் முதல் அதிகாரத்தில் காணப்படும் கருத்துக்கள் அடங்கியுள்ளன. படைக்கப்பட்ட அனைவரிடமிருந்தும், மிகக் குறிப்பாக கண்ணுக்குத் தெரிகிற அமைப்பின் சார்பாக இருக்கும் மானிடரிடமிருந்து கடவுளை நோக்கி புகழ்ச்சி வந்து கொண்டிருக்கிறது என்கிற உண்மையை இந்தத் திருப்பாடலில் நாம் காணலாம். கடவுளை நன்றாக அறிகின்றவர்கள் அவரிடத்தில் கீழ்ப்படிந்து அவரை வணங்குகின்றனர். அத்தகையோர் அளிக்கும் இரண்டு விதமான பதில்கள் இந்தப் பாடலில் அடங்கி இருக்கின்றன. முதலாம் பதிலில், மானிடரும், படைக்கப்பட்ட யாவரும் கடவுளைச் சார்ந்திருக்கும் நிலை குறித்து கூறப்பட்டுள்ளது. தங்களைப் படைத்த கடவுளின் திருமுன்னிலையில், அவரை வழிபடுகிறவர்கள் தங்களின் பலவீனத்தையும், ஒன்றுமில்லாமையையும் உணர்கின்றனர். இருந்தபோதிலும் அவர்கள் கடவுளின் மீது நம்பிக்கை வைத்து, நன்றியுணர்வுடன் அவரை உற்று நோக்கி, தாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுளையே சார்ந்து வாழ்கின்ற நிலையை ஒப்புக் கொள்கின்றனர். இரண்டாம் பதிலில், கடவுளை வழிபடுகிறவர்கள் தங்களின் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதாகப் பார்க்கிறோம். படைப்பின் சிகரமாக கடவுள் தங்களைப் படைத்தது குறித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். படைக்கப்பட்டுள்ளவற்றின் மீது மானிடருக்கு கடவுள் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறபடியால், இந்த உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் பராமரிக்கும் பொறுப்பும், கடமையும் தங்களுக்கு உண்டு என்று கூறுகின்றனர்.

ஐந்தாம் மற்றும் ஏழாம் திருப்பாடல்களில் 'கடவுளின் பெயர்' (திபா 5:11 7:17) குறித்துக் கூறப் பட்டுள்ளது. 'கடவுளின் பெயர்' என்கிற சொற்றொடர் வெறுமனே 'கடவுள்' என்று அறியப்படுகிறது. மேலும், அது கடவுளின் 'தன்மை அல்லது தகைமை' என்றும் பொருள் கொள்ளப்படலாம். கடவுளின் வேலையைக் குறிப்பதற்கும் 'கடவுளின் பெயர்' என்று சொல்ல முடியும். தனது தன்மைக்கேற்ப அவர் சில செயல்களைப் புரிகிறார். அத்தகையச் செயல்களைச் சுட்டிக்காட்டுவதற்கு 'கடவுளின் பெயர்' என்கிற சொற்றொடர் பயன் படுத்தப்படுகிறது (திபா 72:19,19). 'கடவுளின் பெயர்' என்கிற சொற்றொடர் ஒன்பதாம் திருப்பாடலிலும் வருகிறது (திபா 9:2,10). எட்டாம் திருப்பாடலில், கடவுளின் பெயரின் மகிமை அறிவிக்கப்படுகிறது (திபா 1:9). இங்கே ஒரு இறையியல் பொதிந்த மானுடவியலை (Thaological Anthropology) நாம் பார்க்கிறோம். ஒரு மனிதன் எப்பொழுது கடவுளை ஆண்டவராக (தலைவராக) ஏற்றுக்கொள்கிறானோ அப்பொழுதுதான் அவன் முழுமையான மனிதனாகிறான். 'ஆண்டவர்' என்கிற வார்த்தை 'யாவே', 'அதோனாய்' என்கிற இரண்டு எபிரேயச் சொற்களைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. முதலாவதாக, 'யாவே' என்கிற வார்த்தை 'ஆண்டவர்' என்று மொழி பெயர்க்கப்படுகிறது. ஓரேபு (சீனாய்) மலை அடிவாரத்தில் எரியும் முட்புதரிலிருந்து மோசேயிடம் கடவுள் பேசியபோது 'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' (விப 3:14) என்று வெளிப்படுத்தினார். அந்த வெளிப்படுத்துதலின் அடிப்படையில் கடவுளின் பெயர் 'யாவே' என்று இஸ்ரயேலர் புரிந்துகொண்டனர். இரண்டாவதாக, 'தலைவர்' என்கிற அர்த்தம் கொண்ட 'அதோனாய்' என்கிற வார்த்தை பிற்காலத்தில் 'யாவே' என்கிற பெயருக்கு மாற்றாக இஸ்ரயேல் மக்களால் பயன் படுத்தப்பட்டதாக அறிகிறோம். 'யாவே' என்கிற பெயர் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டப் பெயராக இருக்கிற காரணத்தினால், மக்கள் அப்பெயரை உச்சரிக்கத் தயங்கினார்கள். இஸ்ரயேல் மக்களின் சிந்தனையின்படி, ஒருவரின் பெயரை நாம் உச்சரித்தால் அல்லது அந்தப் பெயரைச் சொல்லி அவரை அழைத்தால் அவரை நம்

கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார் என்றாகிவிடும். கடவுளின் பெயரை உச்சரித்து அவரை அழைத்தால், அவர் நம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுவதாகப் புரிந்துகொள்ளப்படும். ஆகவே இஸ்ரயேலர் கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட 'யாவே' என்கிற அவரது பெயரை ஒருபோதும் உச்சரிப்பதில்லை. ஏடுகளில் எழுதப் பட்டிருந்தாலும் அதை அவர்கள் வாசிக்கமாட்டார்கள். அமைதியாக அவ்வார்த்தையை விட்டுவிட்டு, தொடர்ந்து வாசித்துக் கொண்டிருப்பர். ஆனால் பிற்காலத்தில் 'யாவே' என்று எங்கெங்கெல்லாம் எழுதப்பட்டிருந்ததோ அந்த இடங்களில் 'யாவே' என்று வாசிப்பதற்குப் பதிலாக 'அதோனாய்' என்று வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர்.

முழுமையான உண்மையான மனிதன் எப்பொழுதும் கடவுளைவிடச் சற்று சிறியவனாகத்தான் இருக்க முடியும் (திபா 8:5). இந்த மானுடவியல் சிந்தனை ஒன்பதாம் திருப்பாடல் தொடங்கி 14ஆம் திருப்பாடல் வரை உள்ள பகுதியில் அடங்கியிருப்பதைக் காணலாம். இந்த மானுடவியல் தத்துவத்தின் அடிப்படையில் நோக்குகிறபோது, கடவுளை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாத நிலையில் மனிதன் தன் நிலையிலிருந்து சறுக்கி விழுகிறான் (காண்க திபா 12:4ஆ). விண்ணில் மின்னிக்கொண்டிருக்கும் விண்மீன் முதல் தொட்டிலில் தவழ்ந்து கொண்டிருக்கும் குழந்தை வரை யாவரும் கடவுளை வணங்குகின்றனர். வெவ்வேறு உயிரினங்கள் தங்களது குரலை கடவுளை நோக்கி எழுப்புகின்றன. மானிடரிடம் கடவுள் சற்று வித்தியாசமாய் எதிர்பார்க்கிறார். யாருடைய கட்டாயமுமின்றி, அவர்களாகவே உணர்ந்து, கடவுளுக்குப் புகழ்ச்சியையும் வணக்கத்தையும் எழுப்பிட மானிடருக்கு மட்டும்தான் முடியும் என்கிற கருத்து இத்திருப் பாடலில் வெளிப்படுகிறது.

இந்தத் திருப்பாடலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1. ஆண்டவரின் மகிமை (திபா 2-3); 2. படைக்கப்பட்டவற்றை மானிடர் ஆளுகின்றனர் (திபா 4-9). இந்தத் திருப்பாடல் 'கருத்தை உள்ளடக்குதல்' (inclusio) என்கிற இலக்கிய நடையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் முதலாம் இறை வாக்கியமும், இறுதி இறைவாக்கியமும் (1,9) ஒரே கருத்தினை வெளிப்படுத்துகின்றன. அதாவது, கடவுளின் பெயர் உலகெங்கும் மேன்மையாய் விளங்குகிறது என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இத்திருப்பாடல் தொடங்குகிறது. அதே கருத்தை மீண்டும் வலியுறுத்தி இது முடிவடைகிறது. முதலாம் இறை வாக்கியத்திற்கும் இறுதி இறை வாக்கியத்திற்கும் இடைப்பட்ட பகுதி 'மேன்மை மிக்க கடவுளின் பெயர்' என்கிற மையச் சிந்தனையை விளக்குவதாக அமைந்துள்ளது.

கடவுளின் பெயர் இறைத்தன்மையை சுமந்து நிற்கும் ஓர் அடையாளம். ஒருவருக்கு அவரது பெயர் ஓர் அடையாளத்தைக் கொடுக்கிறதோடு, அவருடைய ஆளுமைத் தன்மையை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளது. ஒருவரின் பெயர்தான் அவர் தன் சமுதாயத்துடன் வாழ்கின்றார் என்பதன் அடையாளம் பெயர் என்று சொல்லி விடலாம். பெயரில்லாத ஒருவரை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஒரு நபருக்கு மானிட அந்தஸ்து, சமுதாய அந்தஸ்து ஆகியவற்றைக் கொடுப்பது அவருடைய பெயர்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

முதலாம் பகுதிக்கு (திபா 2ஆ,3) பல விவிலிய அறிஞர்கள் விளக்கம் கொடுத்திட முயற்சி எடுத்துள்ளனர். ஆனால் அவர்கள் அளித்துள்ள விளக்கங்கள் திருப்தியாக இல்லை. பொதுவாகச் சொல்லப் போனால், இவ்விரு இறைவாக்கியங்களும் கடவுளின் மகிமையையும், மாட்சிமையையும் மிக அருமையாக எடுத்துரைக்கின்றன. கடவுள் தம் பகைவர்களையும் எதிரிகளையும் அடக்கியுள்ளார். எவ்வாறு? "பாலகரின் மழலையிலும் குழந்தைகளின் மொழியிலும் வலிமையை உறுதிப்படுத்தி" கடவுள் தம் பகைவரையும் எதிரியையும் பழிவாங்குவோரையும் அடக்குவதாக (திபா 2) பாடலாசிரியர் குறிப்பிடுகிறார்

அதாவது, உலகத்தவரின் கண்களுக்கு எது மிகச் சாதாரணமானதாகவும், பலமில்லாததாகவும் தென்படுகிறதோ அதைப் பயன்படுத்தி, கடவுள் தம் வலிமையை வெளிப்படுத்தி, தம்மை எதிர்க்கிறவர்களை முறியடிக்கிறார். வெறும் முன்னூறு நபர்களை உதவியாய் வைத்துக்கொண்டு, பலம் பொருந்திய மிதியானியரை வென்றிட கிதியோனுக்கு கடவுள் உதவினார் (நீத 7). அதைப்போலவே தாவீது போர்க்கலை அறியாத இளைஞனாக இருந்தபோது, பெலிஸ்தியர்களின் மாவீரன் கோலியாத்தை போர்க்களத்தில் வென்று, கொன்று அச்சத்தில் உறைந்திருந்த இஸ்ரயேல் மக்களும், சவுல் அரசர் உட்பட அனைத்து ஆட்சியாளர்களும் நிம்மதி பெருமூச்சு விடக் காரணமாக இருந்தது கடவுள்தான் (1 சாமு 17:41-54). மேலும், கடவுளின் ஞானத்தினால் உருவாக்கப் பட்டுள்ள இயற்கையையும், அதோடு இணைந்துள்ள யாவற்றையும், கடவுளின் அனைத்து வேலைப் பாடுகளையும் நாம் நோக்குகிறபோது கடவுளின் அபரிமிதமான ஆற்றலை நாம் உணர முடிகிறது (இவா 3). கடவுளை அண்டி வாழ்வோர் அவரது மேன்மையையும், ஆற்றலையும் பறைசாற்றுகின்றனர்; ஆனால் அவரை எதிர்ப்போர் அழிவை நோக்கிச் செல்கின்றனர்.

இத்திருப்பாடலின் **இரண்டாம் பகுதியில்**, மானிடப் பிறவியின் சிறப்புக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. கடவுளின் படைப்பாகிய மனிதன் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறான். கடவுளின் முன்னிலையில் மானிடர் ஒன்றுமில்லை என்றாகிறது (இவா 4). கடவுளின் திருமுன் அவரை வழிபடுகிறவர்கள் தங்களின் பலவீனம் மற்றும் சிறுமையை உணர்கின்றனர். அதாவது கடவுளைச் சார்ந்துதான் வாழமுடியும் என்று அறிகின்றனர். "மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்?" (இவா 4) என்று இப்பாடலின் ஆசிரியர் கேள்வி எழுப்புகிறார். அதே இறைவாக்கியத்தில் அடுத்த வரியில் அதைப்போன்ற ஒரு கேள்வியை எழுப்புகிறார். கேள்விகள் இரண்டு. ஆனால் அவை இரண்டும் ஒரே பொருளைக் கொண்டுள்ளன. ஒரே கருத்தை இரண்டு வரிகளில் திருப்பாடலாசிரியர் உணர்த்துகிறார். கடவுளின் மேன்மையும் மானிடரின் ஒன்றுமில்லாமையும் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது (காண்க. திபா 90:1-3). வேறு சில இடங்களில், இந்தக் கேள்வி வேறு அர்த்தத்தில் எழுப்பப்படுகிறது (யோபு 7:17; திபா 144:3). மானிடர் கடவுளைவிட சிறியவராகவே படைக்கப் பட்டுள்ளனர் (இவா 5). 'கடவுள்' என்கிற சொல் இங்கே 'வான தூதர்' 'தேவர்கள்' என்றும் மொழி பெயர்க்கப்படலாம். மானிடர் கடவுளைவிடச் சிறியவர்கள், முக்கியத்துவமற்றவர்கள் என்று நாம் விளக்கலாம். உலகில் படைக்கப்பட்டவை யாவற்றையும்விட மானிடர் உயர்வானவர்கள் என்றும், மாட்சியையும், மேன்மையையும் கடவுள் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளார் என்றும் இத்திருப்பாடல் கூறுகிறது. நாம் இறைத்தன்மையில் பங்கு பெறுவதாக பேதுரு எழுதியுள்ளார் (2 பேது 1;4). மேலும் படைக்கப்பட்ட யாவும் மானிடரால் ஆளப்படுகின்றன (இவா 6-8) என்று திருப்பாடல் விவரிக்கிறது. இந்தத் திருப்பாடலின் இந்தப் பகுதி தொடக்க நூலை நமக்கு நினைவூட்டுகிறது. தம் உருவிலும் சாயலிலும் மானிடரைப் படைத்த கடவுள் (தொநூ 1:26-27), அனைத்து உயிரினங்களையும், படைக்கப்பட்ட யாவையும் மானிடரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கச் செய்துள்ளார் (தொநூ 1:28).

படைக்கப்பட்ட அனைத்தும் மானிடரின் கீழ் இருந்தாலும், கடவுள் எப்பொழுதும் மானிடரைவிட மேலானவர். இத்திருப்பாடல் கடவுளின் பெருந்தன்மையை, தாராள உள்ளத்தை, மனுக்குலத்தின் மீது அவர் கொண்டுள்ள அன்பை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. கடவுள் தம் மாட்சியிலும், மேன்மையிலும் மானிடருக்குப் பங்கு அருளியிருக்கிறார். இந்த அடிப்படையில், மானிடராகிய நம் மாண்பினை எடுத்துரைக்கும் விதத்தில், "நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம்; கடவுளின் மக்களாகவே இருக்கிறோம்" (1 யோவா 3:1) என்று யோவான் எழுதியுள்ளார்.

# நற்கருணை எனும் அருமருந்து

**உறவின் விருந்து நற்கருணை :**



உறவுகள் நம் வாழ்வுக்கு உரம் சேர்க்கின்றன. உறவுகளை அழகுபடுத்த அடையாளங்கள் உள்ளன. உறவின் விருந்து நெருக்கத்தையும், பகிர்வையும், மகிழ்வையும் அளிக்கின்றது. கத்தோலிக்கத் திருச்சபையின் உறவின் கொண்டாட்டம் நற்கருணை திருவிருந்து.

இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று நம் பெருமான் இயேசு ஆரம்பித்து வைத்த இறுதி இராவுணவு விருந்து வாழ்வின் ஜீவ அருள்சக்தியை அபரிதமாகக் கொண்டது. நற்கருணையை தினமும் உண்டவர்கள், உண்பவர்கள் அனைவரும் நோய், பேய் முதலியவற்றிலிருந்து விடுதலைப்பெற்று, வாழும் வாழ்க்கைக்கு சான்றுபகர்கின்றார்கள்.

**காலத்தால் அழியா நற்கருணை நாதரின் புதுமைகள் :**

எனது சதை உண்மையான உணவு எனது இரத்தம் உண்மையான பானம் (புனித யோவான் 6:55)என்ற இறைவார்த்தையின்படி இயேசுவை நற்கருணை வழியாக தினமும் உட்கொண்டவர்கள் இன்று புனிதர்களாக, புனிதைகளாக உருமாறியிருக்கின்றார்கள். அப்படி நற்கருணை பக்தர்களின் அழியா உடல்கள் மொத்தம் 250. அவ்வுடல் அழியாப் புனிதர்களில் சிலர்.

1.புனித மரியா மார்கெரெத் (1247-1297) 2. புனித நிக்கோலன் (1235-1305) 3. புனித பிரான்சீஸ் சேவியர் (1506-1552) 4.புனித ஜான் மரியவியானி (1786-1859) 5.புனித தோமினிக் சாவியோ (1842-1857) 6. புனித மரிய கொரெட்டி (1890-1902) 7. புனித பியோ (1887-1968)

நற்கருணை நாதரை தினமும் உட்கொண்டு ஐந்து காய வரம் பெற்ற ஜெர்மன் நாட்டு தெரேசா நியூமன் (1878-1962) 40 ஆண்டுகள் உணவே சாப்பிடாமல் வாழ்ந்தார். இன்றும் தஞ்சை- கார்மேல் மடம்-அருள் சகோ- ரோசி அவர்கள் ஐந்து காயங்கள் மற்றும் முள்முடி காயம் வரம் பெற்றவராக நம்மிடையே வாழ்ந்து வருகிறார். இவ்வுலகை மீட்க வந்த இறைமகன் இயேசு, நற்கருணையின் வாயிலாக இன்றும் நம்மிடையே புதுமைகள் பல நிகழ்த்துகின்றார்.

**நாம் செய்ய வேண்டியது :**

தினமும் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை நாதரை உண்ணுதல்,அடிக்கடி கோயிலுக்குச் சென்று, தனிமையில் நற்கருணை நாதரோடு பேசி, உறவாடுதல்,

இன்று நற்கருணை நாதருக்கு செய்யப்படும் நிந்தை அவமானத்திற்குப் பரிகாரமாக, ஒவ்வொரு நாளும் திவ்ய நற்கருணை ஆராதனை செய்தல். இறுதியாக, உறுதியாக நாம் பெற்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்கத் தூண்டுதல்.

**பொற்பையில் நான்கண்ட உண்மை :**

பொற்பை நகரில் இன்று பழுத்த பழங்களாய் வாழும் நம் முன்னோர்கள் பலரும் தினமும் காலை 6.00 மணிக்கு எழுந்து திருப்பலியில் பங்கேற்று நற்கருணை உட்கொண்டு, இன்றும் இளமை மாறாப் பொலிவோடும்,துடுக்கோடும் வாழ்ந்து வருவது நான் கண்கூடாய்க்கண்ட உண்மை.

வேண்டுகோள் :- நாம் அனைவரும் திருப்பலி வழியாய் நற்கருணை நாதரை உண்டு, இன்று கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளில் வெற்றி கொள்ளும் வல்லமை பெறுவோம்.

வேண்டும் நற்கருணை நாதரின் உடனிருப்பு!
தூண்டும் நற்கருணை நம்மை நல்வாழ்வுக்கு!

– **ரூபி அனன்ஸியா,** திருச்சி.

# மன்னிப்பின் மாண்பு



மன்னியுங்கள், மன்னிப்பு பெறுவீர்கள் என்ற அருள்நாதர் இயேசுவின் இறைவார்த்தை நம் வாழ்வின் அடிப்படையாக அமையக்கடவது. மன்னிப்பு என்பது சிலருக்குஇயலாத காரியமாகத் தோன்றும், பலருக்கு கோழைத்தனமானதாகத் தோன்றலாம்.ஆனால் நாம் சிந்தித்து பார்த்தால் உண்மையில் மன்னிப்பது என்பது ஒரு வீரச்செயல் என்பது புரியும். வீரம் என்பது வெட்டுவதில் இல்லை, கட்டுவதில் இருக்கிறது.வீழ்த்துவதில் இல்லை, வாழ்த்துவதில் இருக்கிறது.தாக்குவதில் இல்லை, ஆக்குவதில் இருக்கிறது.உடைப்பதில் இல்லை, உண்டாக்குவதில் இருக்கிறது.

நாம் பிறர் மீது பகைமை கொண்டிருந்தால், பிறரை நம் முதுகின் மீது சுமந்து திரிவது போலாகும். அவர் பற்றிய சிந்தனை நமது சக்தி, உத்வேகம், மனநிம்மதி என அனைத்தையும் உறிஞ்சி விடும். பிறரை நாம் மன்னித்துவிட்டால் மறுகணமே நம் மனம் கசிந்து பறவையின் இறகிலும் இலேசானதாக நம் மனம் மாறிவிடும்.நம் சிந்தனைகள் ஆக்கமும் ஊக்கமும் பெறும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மன்னிப்பதின் மகத்துவத்தை சிலுவையில் தொங்கிய வண்ணம் நமக்கு கற்றுத்தந்திருக்கிறார். இயேசுவின் தலையில் முள்முடியை வைத்து அழுத்தி, அவர்மேல்காரி உமிழ்ந்தனர். அவர் உடுத்தியிருந்த மேலங்கியை பங்கிட்டனர். இரண்டு கள்வர்களின் நடுவில் சிலுவையில் அறையப்பட்ட போதும் பிதாவே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாத இவர்களை மன்னியும் என மனமுருகி வேண்டினார். நமக்கும் மன்னிக்க கற்றுத் தந்தார்.

தன்னை வாழவிடாமல் விரட்டியடித்த மெக்கா நகருக்குள் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, படைவீரர்கள் புடைசூழ நபிகள் நாயகம் வந்தபோது, மெக்கா நகர மக்கள் தமக்கு என்ன நேருமோ என்று அஞ்சி நடுங்கினர். மன்னிக்கும் மனம் கொண்ட நபிகள் நாயகமோ, துன்ப துயரங்கள் கொடுத்த மெக்காவாசிகள் அனைவரையும் மன்னித்து விடுகிறேன் என்று மனம் திறந்து கூறி விரோதிகளை மன்னித்தார்.

மகாகவி பாரதியார் திருவல்லிக்கேணியிலுள்ள ஒரு கோவிலுக்குச் சென்று அங்குள்ள யானைக்கு பழமும் தேங்காயும் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் அந்த யானை மதம் கொண்டு அவரை தூக்கி வீச, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர் குணம் பெற்றார். குணமடைந்த பின்அவர்,தான் நடத்திவந்த பத்திரிகையில் கோயில் யானை என்ற கட்டுரையை எழுதினார். அதில் தன்னை கொல்ல முயன்ற யானையைப் பற்றி குறிப்பிடும்போது, அது என்னை யார் என்று அறியாமல் தள்ளி விட்டது. என்னைத் தெரிந்து கொண்டதும் என்மேல் கொண்டிருந்த அன்பால் மௌனமாகியது. எனவே அதைப் பழிவாங்கும் வன்மத்தோடு பார்க்காமல் மன்னித்து விட்டேன் என்று எழுதியிருந்தார்.

ஒரு நாள் அன்னை தெரசா தனது விடுதி குழந்தைகளுக்காக நிதி திரட்டச் சென்றபோது, கோபத்துடன் ஒரு கடைக்காரர் அன்னையின் நீட்டிய கரத்தில் உமிழ்ந்தார். மனம் தளராத அன்னை மிக மென்மையாக, மிகவும் நன்றி ஐயா, இது எனக்கு இருக்கட்டும். என் குழந்தைகளுக்கு வேறு ஏதாவது கொடுங்கள் என்று மற்றொரு கையை நீட்டினார். கடைக்காரரோ உள்ளம் நெகிழ்ந்து, அம்மா என்னை மன்னித்து விடுங்கள் என்று கண்ணீர் சிந்தி தனது இரு கைகளாலும் பணத்தை அள்ளி வழங்கி வணங்கினார்.

தவறு செய்வது மனித இயல்பு அதை மன்னிப்பது தெய்வீகப் பண்பு. ஒரிசாவிலே தம் கண் எதிரே தன்கணவரையும் இரண்டு குழந்தைகளையும் எரித்துக் கொன்ற தீவிரவாதிகளை மனம் திறந்து மன்னித்தார். கிறிஸ்தவ போதகர் கிரஹாம் ஸ்டெய்ன் என்பவரின் துணைவியார். இடி, மின்னலினால் அழிவை உண்டாக்கும் மேகங்களை நாம் வெறுப்பதில்லை. சூட்டினால் நாவை புண்ணாக்கும் உணவை நாம் மறுப்பதில்லை.விபத்துகளை உண்டாக்கும் சாலைகளில் நாம் பயணிக்க தவறுவதில்லை. தன் மடியில் சிறுநீர் கழித்த குழந்தையை தூக்கி வீசுவதில்லை. சுனாமி அழிவைத் தந்த கடலை நாம் ரசிக்க மறப்பதில்லை. துன்ப துயரங்களோடு நம் வாழ்வை ஏற்றுக் கொண்ட நாம், நம்மை காயப்படுத்தியவர்களையும் மன்னிப்போம், மன்னிப்பு பெறுவோம்.

ரோஜா மலர் தன்னை நசுக்கிய கால்களுக்குத் தரும் நறுமணமே மன்னிப்பு என்றார் மார்க்டிவைன். மன்னிப்பு நம் எதிரிகளையும் அடிமைப்படுத்திவிடும். மன்னிக்கும் மனம் நம்மை வீரனாக்கும் மன்னிப்பு கேட்கும் பக்குவம் நம்மை மாவீரனாக்கும். மன்னிக்க இயலாத மனம் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் மன்னிக்க முடியாத குற்றம் என்று எதுவும் இல்லை என்றார் அன்னை தெரசா. நாமும் பிறரை மன்னித்து, தெய்வீகப் பண்பாகிய மன்னிப்புக்கு நம் வாழ்வில் இடம் தருவோமாக.

**– த. பீட்டர் அந்தோணிராஜ் ஆசிரியர்**

## அன்னையே

கருணைக் கடலே
கலங்கரை விளக்கே
கல்விக்கு கரங்கொடுக்கும்
கவின் மிகு அன்னையே
கரம் குவிப்போம் அன்னைக்கு
சிரம் தாழ்த்திப் பணிவோம்
மனம் மகிழ் தேரினிலே
மணத்துடன் அமர்ந்தனையே!

- T. **சுகிர்தமணி அன்பரசன்,** கவரைப்பேட்டை.

## நன்றி உமக்கு

திங்கள் தோறும் திகட்டாத இன்பமாய்
தினந்தோறும் ஆச்சர்யமாய்
தித்திக்கும் நன்மைகளை
திகட்டாமல் அளித்திடும்
திக்கற்ற மக்களை
திருப்தியாக அனுப்பிடும்
திருக்கல்யாண அன்னையே
தினந்தோறும் நன்றி உமக்கு !

- D. **ஜோஸ்பின் ,** கவரைப்பேட்டை.

## கூட்டாஞ்சோறு விளையாட்டு

கொட்டாங்கச்சியில் நீரோட்டு, குறுமணல் கலந்தால் அது சாதம்!
தெள்ளிய மணலில் நீர்விட்டு, குழப்பி வைத்தால் அது குழம்பு!
குழந்தைகள் வரிசையில் தானமர்ந்து, கிழிந்த வாழை இலை விரித்து
கூடி மகிழ்ந்து உணவு உண்ணும், கூட்டாஞ்சோறு விளையாட்டு!
குழந்தைகள் மனதில் ஒற்றுமையை, கூட்டிய அந்த விளையாட்டு
மறைந்து போனது இன்று – கணினியுக, குழந்தைகளுக்கு அதை கற்பிப்பது என்று?

S. **டிவாஸ் ,** கோவை.

# இயேசுவின் உயிர்ப்பு நம் வாழ்வின் மீட்பு !



மண்ணுலகைப் படைத்த இறைவன் தான் படைத்த அனைத்திற்கும் தலைவனாக மனிதனைப் படைத்தார். மற்ற படைப்புகள் அனைத்தையும் உண்டாகட்டும் என்ற ஒரே சொல்லில் படைத்த இறைவன். மனிதனை மட்டும் தன்கையினால் மண்ணால் உருவாக்கி தனது உயிர் காற்றை ஊதி மனிதனுக்கு உயிர் கொடுத்தார். அவ்வாறு தனது சாயலில் உருவாக்கிய மனிதன் அவருக்கு கீழ்ப்படிய மறுத்து தன் விருப்பம் போல் வாழ்ந்ததால் பாவத்தில் வீழ்ந்தான். ஆயினும் இறைவன் மனிதனை அப்படியே விட்டுவிடவில்லை. தன் ஒரே பேறான மகனை உலகிற்கு அனுப்பி பலியாக தந்து நம்மை பாவத்திலிருந்து மீட்டார். அவ்வாறு அனுப்பப்பட்ட நம் ஆண்டவர் இயேசுவும், அவருடைய மந்தையின் சொந்த ஆடுகளான நமக்காக நம் பாவங்களுக்காக சிலுவை சுமந்து, மரித்து மூன்றாம் நாள் உயிர்தெழுந்து நம்மை பாவத்திலிருந்து மீட்டு விண்ணகத்துக்கு உரிமையாளர்கள் ஆக்கினார்.

**இயேசுவின் உயிர்ப்பு :-**

விதை மண்ணில் மடிந்தால் தான் அது மீண்டும் மரமாகும்.அதுபோல் இயேசுவின் இறப்பு நிரந்தரமானது அல்ல அது தற்காலிகமானது. ஏனென்றால் இலட்சியவாதிகள் புதைக்கப்படுவது இல்லை. விதைக்கப்படுகிறார்கள். விதைப்பது நிச்சயமாக துளிர்க்கும். உண்மைக்காக, நீதிக்காக, நியாயத்துக்காக உயிர் கொடுத்தார் இயேசு. உண்மை ஒருபோதும் உறங்காது, உயிர் பெற்று எழும்பும். நாம் கடவுளுக்கேற்ற பயன் அளிக்க வேண்டும் என்று கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார் (உரோமையர் 7:4) ஆம். கிறிஸ்துவின் சாயலில் படைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் உயிரோடு இணைந்திருக்கும் நாம் படைக்கப் பட்டதற்கான பயனை கடவுளுக்கு அளிப்பது எவ்வாறு? தன்னைப்போல் பிறரை அன்பு செய்வதன் மூலமே நாம் கடவுளுக்கு ஏற்ற பயன் தந்து கிறிஸ்துவோடு உயிர்க்கமுடியும்

**நம் வாழ்வின் மீட்பு :-**

இயேசு கிறிஸ்துவின் அன்பு தன்னையே தருகின்ற அன்பு அவரது கல்வாரி அன்புக்கு நிகரானது இப்பூவுலகில் ஒன்றுமே இல்லை. மானுடம் மகிமை பெற இயேசு தம் இன்னுயிரையும் தந்தார்.அவரது வீழ்ச்சியில் நமக்கு மாட்சியை தந்தார். நம்மில் பாவம் நிரம்பி வழிந்தாலும் பரமன் இயேசுநமக்காக மீண்டும், மீண்டும் கல்வாரியில் பலியாகி நம்மை புதுப்பிறப்பு அடையச் செய்கிறார். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் உலகிற்கு உப்பாக ஒளியாக வாழ வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார். ஆகவே விழுவது எழுவதற்காகத் தான் என்ற மாற்றம் நம் மனங்களில் பிறக்குமேயானால் நம் பாவத்திலிருந்து மீட்டு, இறைவன் தரும் மீட்பில் பங்கு கொள்ள முடியும்.

நம்மை படைத்து, காத்து வழி நடத்தி வரும் இறைவனுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் என்ன? திருத்தூதர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது போல், நாமும் விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றிகிறிஸ்துவுக்கு சான்று பகரும் வாழ்க்கை வாழ்வதே நாம் படைப்பின் ஆண்டவருக்கு செய்யும் நன்றிக் கடன் ஆகும்.

- **M. மிக்கேல் உஷா,** பொற்பை

# இவரே இயேசு

In Biology, இவர் தோற்றம் இயற்கையானது அல்ல In Chemistry, இவர் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றினார். In Physics, இவர் புவிஈர்ப்பு விசைக்கு எதிராக வானகம் சென்று பரலோகத்தில் வீற்றிருக்கிறார். In Economics, இவர் பொருளாதார கொள்கைக்கு மாற்றாக 5 ரொட்டி துண்டுகளையும், 2 மீன்களையும் 5000 பேருக்கு பகிர்ந்தளித்தவர். In Medicine, இவர் நோயாளிகளையும், பார்வையற்றோரையும் எந்த ஒரு மருந்தும் இல்லாமல் குணப்படுத்தியவர். In History, இவரே தொடக்கமும் முடிவும், In Goverment, நானே வழியும், உண்மையும், உயிரும் என்று உரைத்தவர், அமைதியின் அரசர். In Religion, என் வழியாயனறி எவரும் பரம தந்தையிடம் செல்லமுடியாது என்று கூறியவர், எந்த Degree-யும் முடிக்கவில்லை, ஆனால் நல்ல ஆசிரியர், எந்த மருந்தும் இவரிடம் இல்லை, ஆனால் குணமளிப்பவர். எந்த இராணுவ படைகளும் இல்லை, ஆனால் அரசர்கள் நடுங்குவர், எந்த குற்றமும் புரியவில்லை, ஆனால் சிலுவையில்அறையப்பட்டார். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். ஆனால் இன்றும் உயிருடன் வாழ்கிறார், நமக்காகவே வாழும் இந்த பெருமை மிகு தலைவர் யார்? அவர்தான் இயேசு.

- **திவ்யா கிங்ஸ்லி,** பொத்தக்காலன்விளை.

## முடிவில்லாத நிலையான வாழ்வின் வாசல் திறக்கப்பட்டன



யோவான் 11:25. உயிர்தெழுதலும் வாழ்வும் நானே என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். இயேசு வார்த்தையின் வலிமையால் இறந்தவர்களை உயிர் பெறச்செய்தார். வியத்தகு செயல்கள் புரிந்து வந்தார்.

1. இறந்து அடக்கம் செய்யபட்டு நான்கு நாளாகிய இலாசரை உயிர் பெறச்செய்தது. யோவான் 11:43. இலாசரே எழுந்துவா என்ற வார்த்தை உயிர் பெறச் செய்து உண்மையின் அன்பை வெளிப்படுத்தினார்.

2. தொழுகை கூட தலைவனின் மகள் உயிர் பெற்றது மாற்கு 5:36. அஞ்சாதீர் நம்பிக்கை மட்டும் விடாதீர் (மாற்கு 5:41) சிறுமியே எழுந்திடு என்ற வார்த்தை நம்பிக்கையினால் சிறுமி உயிர்பெற்றாள் நயீன் ஊர் கைம்பெண்ணின் நிலையை கண்டு இயேசு பரிவு கொண்டார். லூக்கா 7:14 இளைஞனே எழுந்திடு என்று பாடையை தொட்டதும் இளைஞன் உயிர் பெற்றான். கைம்பெண்ணிடம் பரிவு கொண்டதால் குருதி சிந்திய ஒரு சிகப்பு ரோஜா மலர் வெள்ளைரோஜா மலரென ஒளிர்ந்தது

3. இயேசு மரித்த மூன்றாம் நாள் உயர்தெழுந்தார். இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என நம்பிக்கையில்உறுதி கொண்டு முடிவில்லாத நிலை வாழ்வில் வாழ்ந்திட வரம் அருள வேண்டுவோம்.

- **செல்வம்மாள்,** பொற்றை

# திருச்சபைச் செய்திகள்

1. ஒரு பத்திரிகையாளரின் பார்வையில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் தன்னுடைய பதவியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஓய்வு பெற்றார்.'அன்னஹார்' என்னும் லெபனான் நாட்டு செய்திதாளுக்காக சமய சம்பந்தமான காரியங்களைப் பற்றி 1995ஆம் ஆண்டு முதல் எழுதி வரும் ஹாலா ஹோம்ஸி என்கிற பெண் பத்திரிகையாளர் முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார். பெனடிக்ட் அகில உலகத் திருச்சபையின் தலைமைப் பதவியிலிருந்துஇறங்கியது மிகச் சாதாரண நிகழ்வு அல்ல;மாறாக, திருச்சபையின் சீர்திருத்தத்திற்கு அவராகவே மனமுவந்து,மிகவும் தைரியமாக ஏற்படுத்தித் தந்த அருமையான வழி என்கிறர் ஹாலா ஹோம்ஸி. மிகவும் மனவுறுதியுடன் பெனடிக்ட் எடுத்தமுடிவு திருச்சபையின் நடைமுறை வாழ்க்கைக்கு ஒரு புதிய தொடக்கம்.பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இல்லாத ஒரு புதிய மரபினை அவர் தொடங்கி வைத்தார்.திருத்தந்தை பெனடிக்ட் அவர்களின் இந்த செயலில் அவரது வித்தியாசமான ஆளுமைத்தன்மை வெளிப்பட்டது;ஒரு மாபெரும் இறையியல் நிபுணரின் தாழ்ச்சி, ஒரு தலைசிறந்த சிந்தனைவாதியின் மன தைரியம்,ஓர் அருமையான எழுத்தாளரின் உண்மையான தன்மைஆகியவைஅவரதுசெயலில்வெளிப்பட்டன.அவர்எடுத்தமுடிவுசுதந்திரமானது.திருச்சபையைத் தொடர்ந்து திறமையுடன் வழி நடத்த தன் உடல் நிலை ஒத்துழைக்காது என்பதை தன் உள்ளத்தில் உணர்ந்த பெனடிக்ட் யாருடைய வற்புறுத்தலுக்கும், எந்த நிர்ப்பந்தத்திற்கும் பணிந்து தம் பதவியைத் துறக்கவில்லை என்றும், அவராகவே சிந்தித்து எடுத்த மிகவும் தைரியமான முடிவு என்றும் பெனடிக்ட் அவர்களின் செயலர் பேராயர் ஜார்ஜ் கேன்ஸ்வைன் நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் நாள் கூறினார். இந்த முடிவை ஒரு பலவீனமான நபர் எடுக்கவில்லை; மாறாக, நெஞ்சுறுதி படைத்த ஒரு நபர் எடுத்த முடிவு என்கிற கருத்திற்கு நிச்சயமாக மாற்றுக் கருத்து ஏதும் இல்லை.

2. குழந்தை தெரசம்மாளின் பெற்றோருக்குப் புனிதர் பட்டம்

அக்டோபர் மாதத்தில் 'குடும்பம்' என்கிற மையப்பொருளை அடிப்படையாக வைத்து உரோமையில் நடைபெறப்போகும் அகில உலக ஆயர்ப் பேரவையின் கூட்டம் நடக்கப்போகிற வேளையில் புனித குழந்தை தெரசம்மாளின் பெற்றோர் லூயிஸ், சேலி மார்ட்டின் ஆகியோருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்படவிருக்கிறது.திருமண வாழ்வில் இணைந்து வாழ்ந்த ஒரு தம்பதிக்கு இணைத்து புனிதர் பட்டம் வழங்குவது திருச்சபையின் நீண்ட கால வரலாற்றில் இதுவே முதல் முறை என்று புனிதர்பட்டம் கொடுப்பதற்கு வழிமுறைகளை வகுக்கும் திருச்சபையின் பேரவையின் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாற்றோ வத்திக்கான் பதிப்பகத்தின் புத்தக விற்பனை நிலையம் (Libreria Editrice Vaticana) நடத்திய ஒரு கருத்துப் பரிமாற்றக் கூட்டத்தில் கூறினார்."புனிதர்களால் என்ன பயன்?" என்கிற மையச்சிந்தனை அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.குருக்களும், கன்னியர்களும் மட்டும்தான் புனிதர் பட்டம் பெறுவதற்கு அருகதை உள்ளவர்கள் என்றல்ல,பொதுநிலையினரும் புனிதர் பட்டம் பெற தகுதி பெற்றவர்கள் என்று கர்தினால் அமாற்றோ கூறினார்.லூயிஸூம் சேலியும் 1858ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டனர்.அவர்களுக்குப் பிறந்த ஒன்பது குழந்தைகளில் ஐந்து பேர் அர்ப்பண வாழ்வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.இவ்விருவரும் தங்கள் குழந்தைகளுக்கு சிறந்த முன் மாதிரிகையாய் இருந்தனர். ஒவ்வொரு நாளும் காலை 05.30 மணிக்கு தவறாமல் திருப்பலியில் கலந்துகொண்டனர். மூவேளை செபம் மற்றும் மாலை செபத்தை செபிக்க ஒரு போதும் மறந்ததேயில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் எந்த வேலையும் செய்யாமல் ஓய்வு எடுத்துக் கொண்டனர். தவக்காலத்திலும், திருவருகைக்காலத்திலும் நோன்பு இருக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். பொழுதுபோக்கும் அம்சங்களில் அவர்கள் தயக்கம் காட்டியதில்லை. மொத்தத்தில் சாதாரண வாழ்க்கையை மிக அருமையாக வாழ்ந்து காட்டினர்.ஏழைகளை தங்கள் இல்லத்திற்கு அழைத்து வந்து, அவர்களுக்கு வயிறார உணவு வழங்கினர். வயதானவர்கள் மற்றும் நோயாளிகளை அடிக்கடி சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.தங்கள் பிள்ளைகளுக்கு நல்லபழக்க வழக்கங்களை, மிகக் குறிப்பாக, மிகவும் வறுமையில் வாழும் மக்களை மதித்து ஏற்றுக்கொள்ளும் மன்நிலையை அவர்களின் மனதில் வளர்த்தனர்.சேலி 1877ஆம் ஆண்டு தமது நாற்பத்தாறாம் வயதில் கேன்சர் நோயினால் மிகவும் அவதியுற்று இறந்தார்.அவர் இறந்தபோது மிகக்குறைந்த வயதுடைய ஐந்து பெண்பிள்ளைகளை வளர்க்கும்பொறுப்பு லூயிஸிடம்வந்தது.அவர்1894ஆம்ஆண்டு மிகக்கடுமையான மன நோயினால் தாக்கப்பட்டு இறந்தார். லூயிஸூம் சேலியும் நல்ல குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டதற்காக அவர்களுக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்படவிருக்கிறது. 2008ஆம்

ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் இந்தத் தம்பதிக்கு முத்திப்பேறுபட்டத்தை வழங்கினார் என்பதுகுறிப்பிடத்தக்கது. நல்ல குடும்பவாழ்க்கைக்கு இவ்விருவரும் நல் உதாரணமாகத் திகழ்கின்றனர்.இவர்களின் புதல்வி குழந்தை தெரசம்மாள் மறைபோதக நாடுகளின் பாதுகாவலியாக இருக்கிறார்.திருச்சபையில் மொத்தம் நான்கு பெண் புனிதர்களுக்குத்தான் மறைவல்லுனர் பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.அவர்களில் ஒருவர் குழந்தை தெரசம்மாள்.1997ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவரை மறைவல்லுனர் என்று அறிவித்தார்.1970ஆம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் புனித சியனா கத்தரீனாளையும், புனித அவிலா தெரசம்மாளையும்,2012ஆம் ஆண்டில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் புனித பிங்கன் ஹில்டகார்ட் என்பவரையும் மறைவல்லுனர்கள் என்று அறிவித்தனர்.ஆனால் ஆண் புனிதர்களில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் மறைவல்லுனர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

3. பாகிஸ்தான் ஆலயங்களில் தற்கொலைப் படையினர் தாக்குதல்

மார்ச் மாதம் 15ஆம் நாள் பாகிஸ்தான் நாட்டில், லாகூர் பகுதியில் யூஹனாபாத் என்கிற இடத்தில் ஒரு கத்தோலிக்க ஆலயமும்,பிரிவினை சபையொன்றின் ஆலயமும் தற்கொலைப் படையினரால் குண்டு வெடித்துத்தாக்கப்பட்டதில் பதினைந்து பேர் கொல்லப்பட்டனர்.எண்பது பேருக்கு மேல் காயமடைந்தனர்.இந்த இரண்டு ஆலயங்களிலும் மக்கள் ஞாயிறு வழிபாட்டில் கலந்துகொண்டிருந்தபோது இரண்டு தற்கொலைப்படையினர் தாக்கினர்.தற்கொலைப் படையினரோடு தொடர்பு கொண்டவர்கள் என்று இரண்டு நபர்களைச்சந்தேகித்து அவர்களை மக்கள் பிடித்துக் கொடூரமாகத் தாக்கிக் கொன்றனர். இந்தத் தற்கொலைப்படைத்தாக்குதலை நடத்தியவர்கள் தலிபன் தீவிரவாதிகளின் கூட்டத்திலிருந்து உருவான ஒரு தீவிரவாத அமைப்பைச்சேர்ந்தவர்கள்.இந்த கொலைவெறித்தாக்குதல் உலகமெங்கும் பேரதிர்ச்சியைத்தந்துள்ளது.லாகூரின் பேராயர் செபஸ்தியான் ஷா மார்ச் மாதம் 16ஆம் நாளை தற்கொலைப்படையினரின் தாக்குதலில் மறைச்சாட்சிகளாக உயிர் துறந்தவர்களுக்காக துக்க நாளாக அனுசரிக்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். அனைத்துக்கத்தோலிக்கப்பள்ளிகளும் நிறுவனங்களும் கொல்லப்பட்டவர்களின் நினைவாக மூடப்படவேண்டும் என்றும் அவர் அறிவித்தார்.தீவிரவாதத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இரத்தம் பயன் இல்லாமல் போகாது.அவர்கள் சிந்திய இரத்தம் நாட்டு மக்களுக்கு சமாதானத்தைக்கொண்டு வரும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.மேலும் அவர் கிறிஸ்தவர்களுக்கு சரியான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று பாகிஸ்தான் நாட்டு ஆட்சியாளர்களிடம் விண்ணப்பித்தார்.பாகிஸ்தான் ஆயர்கள் பேரவையின் தலைவரும் கராச்சி உயர் மறைமாவட்டத்தின் பேராயருமான ஜோசப் கூட்ஸ் இந்தக்கொடூரக் கொலைவெறித்தாக்குதலை மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்.கிறிஸ்தவ ஆலயங்களுக்கும், சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கிட வேண்டுமென்று பஞ்சாப் மாநில அரசிடமும், பாகிஸ்தானின் மைய அரசிடமும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். மேலும் மக்கள் எந்த விதமான வன்முறைச்செயல்களிலும் ஈடுபடாமல், காவல் துறையினர் நடத்துகிற விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர் கிறிஸ்தவர்களிடம் கூறியுள்ளார்.தற்கொலைப் படையினரின் கொலைவெறித்தாக்குதல் நடந்த அன்று திருத்தந்தை ஃபிரான்சிஸ் மூவேளை செபத்தை மக்களோடு சேர்ந்து செபித்தபின், பாகிஸ்தான் மக்கள் மத்தியில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று கூறினார்."நம்முடைய சகோதர சகோதரிகள் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதனாலேயே இரத்தம் சிந்துகின்றனர்" என்றும், ஞாயிறு வழிபாட்டின்போது தற்கொலைப் படை தீவிரவாதிகளால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட செய்தியை"மிகவும் கவலையுடன்"தான் பெற்றுக்கொண்டதாகவும் திருத்தந்தை கூறினார்.

4. மண முறிவினால் குடும்பங்களில் ஏற்படும் பாதிப்பு

அமெரிக்காவின் குழந்தைகள் நல மருத்துவக்கல்லூரி மார்ச் மாதம் 9ஆம் நாள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மண முறிவினால் குடும்பங்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு, ஏற்படும் பாதிப்புப்பற்றி பத்து ஆண்டுகளுக்கு மேல் அறிவியல் பூர்வமாக நடத்தப்பட்ட இரண்டு ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.பொதுவாக,ஒருகணவனுக்கும்மனைவிக்கும்.இடையே ஏற்படும் கருத்து வேறு பாடுகளின் காரணமாக மிகப் பெரிய விரிசல் உருவாகுகின்ற போது, அவர்கள் மண முறிவைப் பெற்று பிரிந்து செல்வதுதான் சரியானது என்றும், குழந்தைகள் எப்படியாவது புதிய சூழ்நிலையைப்

புரிந்துகொண்டு, அதற்குத் தகுந்தாற்போல வாழ தங்களைப் பழக்கிக்கொள்வர் என்கிற கருத்தும் தற்காலத்தில் மேலோங்கியிருக்கிறதை நாம் அறிந்துள்ளோம். ஆனால் அது தவறான கருத்து என்று மேற்குறிப்பிட்டுள்ளஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந்துள்ளது. ஒரு சில குழந்தைகள் வேண்டுமானால் சூழ்நிலையைத்தெரிந்துகொண்டு, சமாளித்துக்கொள்வார்கள். ஆனால் பல குழந்தைகள் தங்களின் பெற்றோர்களின் நிரந்தரப்பிரிவினால் மிக அதிகமான அளவில் பாதிக்கப்படுவர் என்றும், பிரியும் நிலையில் இருக்கும் தம்பதியர் தங்களின் முடிவை மாற்றிக்கொண்டு தங்கள் திருமண வாழ்வைத் தொடர்கிறபோது, அதனால் குழந்தைகளின் செயல்பாடு சிறப்புடன் திகழ்கிறதுஎன்றும் அந்த அறிக்கை கூறுகிறது.மண முறிவைப்பெற்றுப் பிரிந்து வாழும் தம்பதியர்களின் குழந்தைகளின் படிப்பு பெருமளவில்பாதிக்கப்படுகிறது எனவும்,அத்தகைகைய குழந்தைகள் மன ரீதியாக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் எனவும், சமுதாயத்தில் அவர்கள் மற்றவர்களிடம் பழகுவதிலும் அதிகமான பிரச்சினைகளை அவர்கள் சந்திக்கின்றனர் எனவும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மண வாழ்வில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தம்பதியரில் மூன்றில் இரண்டு பேர் மண முறிவைத் தேடாமலும், பிரிந்துபோக விரும்பாமலும், தங்களின் மண வாழ்வைத்தொடர்கிறபோது, ஐந்து ஆறு ஆண்டுகளுக்குப்பின் மிகவும்மகிழ்ச்சியான இல்லறத்தைத் தொடர்கின்றனர் என்பதை ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிந்துள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.மண முறிவு பெற்றுள்ள ஒரு தகப்பனிடமோ அல்லது தாயிடமோ வளரக் கூடிய குழந்தைகள் வாழ்வில் அதிகமாக முன்னேற முடியாமல் அல்லலுறுகின்றனர்.திருமணம் செய்துகொள்ளாமலே சேர்ந்து வாழும் தம்பதியர்களின் எண்ணிக்கை அகில உலக அளவில் அதிகரித்துள்ளதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஏராளமான மண முறிவுகள் திருமணத்திற்குப்பின் முதல் பதினான்கு ஆண்டுகளில்தான் நிகழ்கின்றன; மணமுறிவைப் பெற்றுக்கொள்கிறவர்கள் உடனடியாகவே மறுமணம் புரிந்துகொள்கின்றனர்.ஆனால் அவர்களின் இரண்டாம் திருமணமும் தோல்வியிலும், விரக்தியிலும் முடிகிறது என்கிற உண்மையையும் ஆராய்ச்சிகள் மூலம் தெரிந்துகொள்கிறோம்.பெற்றோரின் மண முறிவின் விளைவாக நிறைய குழந்தைகளின் சமய நம்பிக்கை முற்றிலும் தகர்ந்து போய் விடுகிறது அல்லது நம்பிக்கையில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டு விடுகிறது.

**5. இரக்கத்தின் யூபிலி ஆண்டு**

மார்ச் மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று மாலை வத்திக்கானில் உள்ள புனித பேதுருவின் பேராலயத்தில் பாவமன்னிப்பு வழிபாட்டை திருத்தந்தை தலைமை ஏற்று நடத்தியபோது, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டினை (Extraordinary Jubilee Year) அறிவித்தார்.வருகிற டிசம்பர் மாதம் 8ஆம் நாள் அமலோற்பவ அன்னையின் பெருவிழாவன்று தொடங்கி,2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் நாள் கிறிஸ்து அரசரின் பெருவிழாவன்று இரக்கத்தின் ஆண்டு நிறைவு பெறும் என்று அவர் அறிவித்தார்.சிறப்பு யூபிலி ஆண்டினை திருத்தந்தைஇப்போது அறிவித்திருப்பது திருச்சபையின் வரலாற்றில் அறுபத்தைந்தாவது தடவையாகும்.திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் பாவிகள் என்றும், இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில் கடவுளின் இரக்கத்தின் உதவியை நாடி, அதே இரக்கத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் கூறினார்.இந்த யூபிலி ஆண்டு 1965ஆம்ஆண்டு நிறைவுபெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் ஐம்பதாம் ஆண்டு நினைவாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று வத்திக்கானின் செய்தித்தொடர்பகம் கூறியுள்ளது.இந்த சிறப்பு யூபிலி ஆண்டு சம்பந்தமாகமுறைப்படியான அறிவிப்பு ஏப்ரல் மாதம் 12ஆம் நாள் இரக்கத்தின் ஞாயிறன்று வழங்கப்படும்.பொதுவாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சாதாரண யூபிலி ஆண்டு (Ordinary Jubilee Year) அறிவிக்கப்படும்.இதற்கு முன்2000ஆவது ஆண்டில் சாதாரண யூபிலி ஆண்டு கொண்டாடப்பட்டது.சில சமயங்களில் சூழ்நிலைகள், தேவைகளுக்கேற்ப சிறப்பு யூபிலி ஆண்டு அறிவிக்கப்படும்.இதற்குமுன்,1983ஆம் ஆண்டினை மீட்பின் சிறப்பு யூபிலி ஆண்டாக (Holy Year of Redemption) திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அறிவித்திருந்தார்.

அருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330, 261430**

**07-02-2015 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1543 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1371 பேர் |
| சுகப்பிரசவம் | - | 987 பேர் |
| நற்சுகம்பெற | - | 1672 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 769 பேர் |
| தேவஅழைத்தல் | - | 402 பேர் |
| வேலைகிடைக்க | - | 1901 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1769 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1876 பேர் |
| குடும்பநலன் | - | 672 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 543 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1212 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1243 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1400 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 542 பேர் |
| மனமாற்றமடைய | - | 789 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1427 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 402 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 743 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1367 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 433 பேர் |



அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.

- பங்குத்தந்தை

உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி :kalyanamatha@gmail.com

# அறிவிப்பு

**ஏப்ரல் மாதம் முதல் சனி (04.04.2015) புனித வாரம் பெரிய சனியன்று வருகின்ற காரணத்தினால், ஏப்ரல் மாதம் இரண்டாவது சனிக்கிழமை (11.04.2015) அன்று முதல் சனி வழிபாடுகள் நடைபெறும் என்பதை அனைத்து திருக்கல்யாண மாதா பக்தர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**திருத்தல அதிபர் தந்தை**
திருக்கல்யாணமாதா திருத்தலம்
பொத்தக்காலன்விளை

# புனித வெரோணிக்கா

இவள் ஓர் ஏழை குடியானவனுடைய மகள். எழுதப்படிக்க, இவளுக்கு தெரியாது. கன்னியாஸ்திரியாக விரும்பிய இவளுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஓர் இரவில் இவள் இதனை நினைத்து அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது கிறிஸ்தவர்களின் சகாபியான மரியாள் தோன்றி, வெரோணிக்கா, உனது பாடங்களைக் கற்க முடியவில்லையே எனக்கவலைப்படாதே. நான் சொல்லப் போகும் மூன்று மிகச்சாதாரண, ஆனால் வெகு முக்கியமான காரியங்களை அறிந்திருந்தால் போதும். முதலாவது பற்றுதல்களில் தூய்மை , அதாவது உனது இருதய நேசம் முழுமையும் கடவுள் மீது மாத்திரமே வைத்திரு. சிருஷ்டியை அவருக்காக நேசி. இரண்டாவது: பிறரது பாவங்களையும் குறைகளையும் கண்டு ஒருபோதும் முணுமுணுக்கலாகாது, ஆத்திரம் கொள்ளலாகாது. ஆனால் அவற்றைச் சகித்துக் கொள்ளவேண்டும், அவர்களை மன்னிக்க வேண்டும், அவர்களுக்காக செபிக்க வேண்டும்.மூன்றாவது: என்னுடைய திருமகனது பாடுகளையும் மரணத்தையும் பற்றி ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது தியானிக்க வேண்டும்.

தேவதாய் சொன்ன புத்திமதிகளை வெரோணிக்கா மறக்கவில்லை. அவற்றை அனுசரித்தாள். உலகக் கல்வி அவளிடம் இல்லையென்றாலும் மிலான் புனித மார்த்தா மடத்தில் அவள் கன்னியாஸ்திரியாக வாழ்ந்து புனிதையானாள். அவளது கடமை சமையற்கட்டில் தாழ்ந்த வேலைகளைச் செய்வது, மடத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் காலையிலிருந்து இரவுவரை கவனத்துடனும், மகிழ்ச்சியுடனும் வேலை செய்தாள். இந்த சாதாரண வேலைகளை நன்றாகச் செய்து அவள் அர்ச்சியசிஷ்டவரானாள். அன்னை சொன்ன மூன்றாவது புத்திமதியை வெரோணிக்கா மறக்கவில்லை. கிறிஸ்துநாதரது பாடுகளையும் மரணத்தையும் அவள் எப்பொழுதும் தன் கண்முன் வைத்திருந்தாள்.

**சிந்தனை :** எல்லா அவசரங்களிலும் தேவதாயின் உதவியை நாடிச் செல்ல வேண்டும்.

**செபம் :** சிலுவையில் உயிர்விட்ட இயேசுவே, நான் உம்மை நாளுக்கு நாள் அதிகமாக நேசிக்க உதவி செய்யும்.

நன்றி, தூயவர்களின் வரலாறு

# சாட்சி

**A.**அருள் பிரின்ஸி என்னும் 9–ஆம் வகுப்பு பயிலும் சிறுமிக்கு கால் பெருவிரல் எலும்பில் அடிப்பட்டது. மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்துதான் இந்தப் பிரச்சனையை சரி செய்யவேண்டும் எனக் கூறினார். ஆனால், அவளது தாயாகிய நான் திருக்கல்யாண மாதாவின் அருளைப்பற்றி அறிந்ததால் கட்டாயம் சுகம் கிடைக்கும், சுகம் கிடைத்தால் திருக்கல்யாணமாதா மாத இதழில் சாட்சி எழுதுவேன் என பொருத்தனையுடன் வேண்டினேன். என்னே அதிசயம்! எந்த அறுவை சிகிச்சையும் இன்றி என் மகள் சுகம் பெற்றாள். வாழ்க மாதாவின் மகிமை! வளர்க மாதாவின் புகழ்!



**K. அருள்மேரி,** M.A.,B.Ed., ஆவடி, சென்னை – 56.

அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...



1. திருமணத் தடை நீங்கியதற்கு நன்றி – சேசுபுத்திரன்,லேனம்மாள் இணையம்
2. வெளிநாட்டு விசா கிடைத்தற்கு நன்றி –ஜோஸ்பிரீடா அஞ்சுதெஸ்கு
3. தடைநீங்கி விசா கிடைத்தற்கு நன்றி – குமார் பிரியா மணப்பாடு
4. தொழில் முன்னேற்றம் அடைந்ததற்கு நன்றி – அகிலன் புன்னக்காயல்
5. மூளை அறுவை சிக்ச்சை வெற்றிபெற்று நற்சுகம் கிடைத்தற்கு நன்றி – அந்தோணி ஜோசன் பொத்தக்காலன்விளை
6. கடன் பிரச்சனை தீர்ந்ததற்கு நன்றி – வெண்ணிலா இடிந்தகரை
7. திருமணவரம் கிடைத்துதிருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி – சுரேஷ் தூத்தூக்குடி
8. திருமணவரம் தந்த அன்னைக்கு நன்றி –ஸ்டாலின் குமார் இராமன்புதூர்
9. ஆண் குழந்தை தந்த அன்னைக்கு நன்றி – டென்னிஸ் பிரமிளா எட்டையாபுரம்
10. நேர்முக தேர்வில் வெற்றி கிடைத்ததற்கு நன்றி – F. ஆன்லிடெபிலா நாகர்கோவில்
11. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – M.ரீனஸ் கேசவ புத்தன்துறை
12. திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – லீனஸ், புருனோ கேசவ புத்தன்துறை
13. வேலை கிடைத்ததற்கு நன்றி – டேவிட் போஸ்கோ, நாகர்கோவில்
14. திருமணம்வரம் கிடைத்தமைக்கு நன்றி – லியோ ஜோசப் சகாயராஜ் வாசுதேவ நல்லூர்
15. 4வது போட நல்லமுறையில் கடலில் இறங்கியதற்கு நன்றி – கிளாஸ்டன் இனிட்டா தூத்துக்குடி
16. திருமணவரம் தந்த அன்னைக்கு நன்றி – ஜாண் கிறிஸ்டோபர் அரும்பனை
17. நோயிலிருந்து நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி – ரோஸம்மாள் மேல்பாலை
18. வேலை கிடைத்ததற்கு நன்றி – ஜெனிஸ்டன் கூட்டப்புளி
19. வெளிநாடு சென்றதற்கு நன்றி – ஆனந்த் உவரி
20. நல்ல நிலம்,இல்லம், திருமணம் கிடைத்ததற்கு நன்றி – ஸ்க்ரெஸ் ஜீலியட் வடக்கன்குளம்
21. நல்ல வேலை கிடைத்ததற்கு நன்றி – ஜெயன் டினோ, கூடுதாழை
22. குழந்தைவரம் கிடைத்ததற்கு நன்றி – பிரதானி, கொம்புதுறை
23. சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – ஜெனு கொல்லம்
24. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – வளர்மதி அடைக்கலாபுரம்
25. திருமணவரம் கிடைத்து நிச்சயமானதற்கு நன்றி – ஜெரின், சகாய ஆண்டனி பள்ளவிளை
26. நல்ல இல்லம் கிடைத்ததற்கு நன்றி – கிறிஸ்து அடிமை சாந்தி, விழிஞம்

# மன்னிப்பு

அன்பு என்பது தெய்வீகம் ஆனது. இந்த உலகத்தில் மனித அன்பு மாறிவிடும். ஆனால் இயேசுவின் அன்பு ஒருநாளும் மாறாதது. இந்த உலகத்தில் அநேகர் தங்கள் குடும்ப உறவை முறித்துக் கொள்கிறார்கள். அது பாவம் அந்த அன்புக்காக நாம் ஏங்கி கொண்டிருக்கிறோம். நம்மிடத்தில் இந்த தவக்காலத்தில் மன்னிக்கும் மனப்பான்மை இருக்க வேண்டும்.நம்மிடத்தில் விட்டு கொடுக்கும் மனப்பான்மையும் வளர வேண்டும். இன்றைய உலகில் பாவம் செய்வது மனிதனுடைய இயல்பு அதை மன்னிப்பது கடவுளுடைய இயல்பு ஆகும்.

மன்னிப்பு சிகரமாக திகழ்பவர் இறைமகன் இயேசு, உன் சகோதரியோ அல்லது உன் சகோதரனோ உனக்கு எதிராக குற்றம் செய்தால் ஏழுமுறை என்று அல்லது 70 முறை மன்னிக்க வேண்டும். மேலும் உம்மோடு மடிவேன் என்றான் நண்பன். மூன்று முறை மறுதலித்த இராயப்பரை முகம் கோணாமல் இறைமகன் இயேசு அவரை மன்னித்தார் தனது பாடுகளின் பாதை ,வாழ்வின் பாதையில் இரத்தம் வடியவடிய தனது வேதனை யோடு சிலுவையில் தொங்கி கொண்டிருந்தபோது தன்னை சிலுவையில் வேதனைபடுத்தியவர்களை தந்தையே! இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்றுஅறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்று அன்று கல்வாரியின் உச்சகட்டத்திலும் அவர்களுக்காக மன்றாடினார். எனவே நீங்களும் மன்னிக்க இருதயம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஊதாரிதனமாக வாழ்ந்து தன் சொத்தை எல்லாம் அளித்து வந்த அந்த இளைய மகன் தன் தந்தையிடம் மன்னிப்பு கேட்டு அவனை ஏற்றது போல நாமும் மன்னிப்போம். இறைமகன் இயேசு தனது வாழ்வில் பாவிகளை தேடிச்சென்று வழிநடந்து அவர்களையும் மன்னித்தார். நாமும் பிறரை மன்னிப்போம். மேலும் யாரிடத்திலாவது உங்களுக்கு குறை இருந்தால் அவர்களை மன்னியுங்கள். நீங்கள் மன்னித்தால்தான் உங்கள் வானகத் தந்தையும் உங்களை மன்னிப்பார் பூவிலே சிறந்த பூ, மன்னிப்பு, அந்த ஒருவரை நாம் மன்னிப்பது நல்மனங்களில் மலர வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தின் மீது செலுத்த வேண்டும். நீங்கள் உங்கள் சகோதரி சகோதரர்கள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் பலி பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டு போய் முதலில் அவரிடம் சமாதானம் செய்துவிட்டு அதன்பின் வந்து காணிக்கையை செலுத்தி உன் மனம் இரங்கி மன்னிக்க மாட்டாயா, உலகத்திலே சிறந்தது, மன்னிப்பு, அந்த மன்னிப்பை மன்னிக்க தெரிந்த மனிதன் மாணிக்க கோயிலப்பா (மனிதனை கடவுள் தனது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார் என்கிறது விவிலியம் அடிப்படையான நூல். மனிதன் ஒரு சமூகபிராணி என்பது விஞ்ஞானம் நீ கடவுளுக்கு செலுத்தும் காணிக்கையும் பொருளற்றது. நீ முதலில் உன் குடும்பத்தில் யாரிடமாவது சமாதானத்தை செய்துவிட்டு என் சந்தியில் வந்து எனக்கு ஆராதனை செய். என் எம்பெருமான் இயேசு கூறுகிறார். எனவே நாம் நம்மை சுற்றி இருக்கும் சுற்றத்தாரின் தவறுகளை மன்னித்து மாமனிதராவோம். எல்லா தவறுகளையும் மன்னிக்காவிட்டாலும் முடிந்தவரை மன்னித்து வாழ்வோம். இறைமகன் யேசுவின் சாட்சியாய் நாம் வாழ்வோம். பிறரையும் நாம் வாழ–வைப்போம்.

**J. ஜேஸ்மீன்,** சங்கரன்குடியிருப்பு



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி)

பொத்தக்காலன்விளையிலிருந்து ஒரு கலெக்டர்

இன்று கிராமமும், கிராம மக்களும் மிகவும் மாறிவிட்டனர். உயர்கல்வி அதைத் தொடர்ந்து வேலை வாய்ப்புகள் எல்லாம் சேர்ந்து மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி வருகின்றன. மருத்துவக்கல்லூரிகள், இஞ்சினியரிங் கல்லூரிகள், நிர்வாகத்துறை சார்ந்த கல்விக் கூடங்கள் என எல்லா துறைகளிலும் இன்றைய தலைமுறையினர் கால் பதித்துள்ளனர். அதன் ஒரு வெளிப்பாடாக நமது கிராமத்திலிருந்து உரு பெண்மணி ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று கலெக்டராக உள்ளார் என்று கூறினால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இதோ மேற்கொண்டு படியுங்கள்.

பொத்தக்காலன்விளை கிராமத்தில் ஏசுவடியான் உபதேசியார் குடும்பத்தில் பிறந்தவர் ஹேப்பி ஏசுதாசன் நாடார். இவர் கொழும்பு நகருக்கு சென்று வியாபாரம் செய்து செல்வம் சேர்த்தவர். அவருடைய மூத்த மகன் பீட்டர்ஜோசப். இவர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பட்டப்படிப்பு பயின்று மெட்ராஸ் செர்விஸ் கமிஷன் மூலம் அரசு ஊழியராக பணியாற்றி இன்று சென்னயையில் வாழ்ந்து வருகிறார். அவருடைய மகன் ஐரின் சிந்தியா. இவர்தான் இந்தக் கட்டுரையின் தலைப்பிற்கு சொந்தக்காரர்.

ஐரின் சிந்தியா 1982-ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்ப படிப்பை சென்னை பெரம்பூரில் உள்ள தூய மரியன்னை மெட்ரிகுலேஷன் பள்ளியில் துவங்கி அதே பள்ளியில் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வை 1999-ம் ஆண்டு எழுதி 1120 மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், அந்த ஆண்டுஉரு வகை விஷக்காய்ச்சல் கண்டு அதன் பக்க விளைவாக கால் வலியால் அவஸ்தைபட்டு நடக்க முடியாத நிலையிலும் தேர்வு எழுதியது மறக்க முடியாதது என நினைவு கூறுகிறார் சிந்தியா. அதன் பின் சென்னை ஸ்டெல்லாமாரிஸ் கல்லூரியில் சேர்ந்து 2002-ம் ஆண்டு பி.காம் முடித்தார்.பி.காம் முடித்த கையொடு சென்னை பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று எம்.பி.ஏ. என்ற முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். இதை சாதாரணமாக பெறவில்லை. பல்கலைக் கழகத்திலேயே முதல் ரேங்க் பெற்று அதோடு தங்கப் பதகத்தையும் தட்டி சென்றார். இது அவர் கல்வியில் பெற்ற சிறந்த சாதனையாகும்.

2004ல் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்த கையோடு ஓய்ந்து இருக்கவில்லை. எம்.காம். என்ற மற்றொரு முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். இரண்டாம் முதுகலைப் பட்டப்படிப்பை தொடர்ந்த வேலையில் படிப்பிற்கேற்ற வேலை தேடுவதிலும் மும்மரமாக ஈடுபட்டார். உயர்கல்வி, ஆழ்ந்த அறிவுக் கூர்மை, அதோடு தனித்து நின்று சாதனை படைக்க வேண்டமென்ற தணியாத ஆர்வம் எல்லாம் சேர்ந்ததால் அவர் விரும்பிய வேலைகள் எல்லாமே தேடி வந்தன. அவ்வாறு வந்த வேலைகளில் முதல்முதலில் வந்தது சென்னை அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தில் தனிக்கையாளர் வேலை. அங்கே ஒரு வருடம் பணி செய்தபின் கைவசம் வந்தது பம்பாயில் பங்கு மார்க்கட்டை கட்டுப்படுத்தும் செபி **(SEBI)**அலுவலகத்தில் அதிகாரி வேலை . சில மாதங்கள் கழித்து இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரி வேலை. இப்படி வரிசைகட்டி வேலைகள் தேடி வந்தன.

இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரி வேலை என்பது சாதாரணமானது அல்ல. மிக அபூர்வமானது. அகில இந்திய அளவில் இரண்டு போட்டித் தேர்வு எழுதி பின் நேர்முக தேர்விலும் வெற்றி பெற்று லட்சத்தில் ஒருவராக நுழைய கூடிய கடினமான ஒன்று. ஐ.ஏ.எஸ். தேர்வைக்காட்டிலும் கடினமானது ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தேர்வு என்று கூறுவோரும் உள்ளனர். அத்தகையை பெரிய சாதனையை படைத்தார் ஜரின் சிந்தியா.

நான் இந்திய ரிசர்வ் வங்கியில் உயர் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றிருப்பது வாசகர்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். எனது கிராமத்தில் இருந்து ஒரு இளம் பெண் எனது வழியைப் பின்பற்றி இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரியாக தேர்வானது அறிந்துபெரு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் சிந்தியாவின் எண்ணமும் நோக்கமும் வேறு திசையில் சென்றன. எப்படியாவது ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று கலெக்டராகி சாதாரண மக்களும் பயன்பெரும் வகையில் பணியாற்ற வேண்டும் என்ற இளம் வயது ஆசை அவரிடம் சுடர் விட்டு எரிந்து கொண்டேயிருந்தது. ரிசர்வ் பேங்க் பணிக்கு விண்ணப்பித்திருந்த நேரம் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கும் விண்ணப்பம் செய்து தேர்வுகள் எழுதிக் கொண்டிருந்தார். அதற்கும் பலன் கிடைத்தது. 2008-ம் ஆண்டு நடந்த ஐ.ஏ.எஸ். இறுதித் தேர்விலும் ஜரின் சிந்தியா வெற்றி பெற்றதாக அறிவிப்பு வெளியானது. இது அவர் பெற்ற மூன்றாவது பெரிய சாதனை.

இனி எங்கு செல்வது, எந்த துறையை தேர்ந்தெடுப்பது என்று தீர்மானிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. அந்த நிலையில் நான் இருந்திருந்தால் ரிசிர்வ் பேங்க் பணியையே தேர்ந்தெடுத்திருப்பேன். ஆனால் சிந்தியாவோ எந்த தயக்கமுமின்றி ஐ.ஏ.எஸ்.யை தேர்ந்தெடுத்தார். 2008-ம் ஆண்டு இறுதியில் ரிசர்வ் பேங்க் வேலையை உதரிவிட்டு டேராடுனில் உள்ள ஐ.ஏ.எஸ். பயிற்சி அக்காடமியில் சேர்ந்தார். அங்கே ஆரம்ப பயிற்சி முடிந்ததும் மத்திய பிரதேசம் மாநிலம் சத்னா மாவட்டத்தில் உதவி கலெக்டராக பணி அமர்த்தப்பட்டார். அந்தப் பணியை வெற்றிகரமாக முடித்ததும் அதே மாநிலத்தில் வளர்ச்சி திட்ட இயக்குனராக ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் அதே மாநிலத்தின் பெர்காம்பூர் மாவட்ட கலெக்டராக நற்பெயருடன் பணியாற்றி வருகிறார். 2011-ம் ஆண்டு சக ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு.எஸ்.வி.நாதனை திருமணம் செய்து ஒரு ஆண் குழந்தைக்கு தாயாகவும் திகழ்கிறார்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை மீண்டும் கூற் விரும்புகிறேன். ஜரின் சிந்தியா விண்ணப்பித்த வேலைக்கான போட்டி பரீட்சைகளில் எதிலுமே தோல்வி அடையவில்லை. கட்டுரையில் குறிப்பிட்டுள்ள போட்டி தேர்வுகள் மாத்திரமல்ல, **SBI,IDBI,TNPSC** போன்ற அமைப்புகளின் போட்டித் தேர்வுகளிலும் பங்கேற்று வெற்றி கண்டுள்ளார். இத்தனை வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் என்ன காரணம், யார் ஆலோசனை வழங்கி வழிகாட்டியது, சிறப்பு பயிற்சிகள் பெற்றதுண்டா என்ற கேள்விகளுக்கெல்லாம் அசராமல் இயற்கையாக பதில் கூறுகிறார் சிந்தியா. சிறப்பு பயிற்சி என்று பெரியதாக எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை என்கிறார் மிகச்சாதாரணமாக. எல்லாமே சொந்த முயற்சிதான். எல்லா வெற்றிகளுக்கும் அவரது தந்தை பீற்றர் ஜோசப்பே மூலக் காரணம் எனக்கூறும் அவர் தந்தையை தன் முன் மாதிரி **(Roll Model)** ஆக பாவிக்கிறார். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே தனது தந்தையின் ஆலோசனைபடி எல்லா போட்டித் தேர்வுகளிலும் பங்கேற்றுள்ளார், இதனால் கேள்விகள் கேட்கப்படும் விதம், எதிர் பார்க்கின்ற பதில்கள், ஒவ்வொரு கேள்விக்கும் விதம், எதிர் பார்க்கின்ற பதில்கள்,ஒவ்வொரு கேள்விக்கும் எடுத்துக் கொள்ள வேண்டிய நேரம் இவை பற்றி நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. அதோடு ஒவ்வொரு தேர்வுக்கும் முன்னால் மனதை ஒன்றுபடுத்தி தேர்வு ஒன்றையே குறிவைத்து தினமும் சுமார் 4 மணி நேரம் ஒதுக்கி தயார் செய்துள்ளார். இவை எல்லாம் சேர்த்துதான் ரிசர்வ் பேங்க் மற்றும் ஐ.ஏ.எஸ். போன்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற வைத்தது என நினைவு கூறுகிறார்.

சிந்தியாவின் வெற்றிப்பயணம் தொடர வேண்டும். இன்னும் பல சாதனைகளை புரிந்து மீண்டும் ரிசர்வ் பேங்குக்கே அதன் கவர்னராக செல்ல வேண்டும் என்ற என் விருப்பத்தை அட்வான்ஸாக தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஈஸ்டர்

அருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவிபாலன்



இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நிகழ்ச்சி மாபெரும் நிகழ்ச்சியாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டில் அந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடியதாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் ஈஸ்டர் என்கிற வார்த்தை 'எயோஸ்ற்ரே' **(Eostre)**அல்லது 'ஓஸ்ற்றாரா' **(Ostara)**என்கிற ஆங்கிலோ–சாக்ஸன் வார்த்தையிலிருந்து மறுவி வந்துள்ளது என்கின்றனர். இந்த ஆங்கிலோ–சாக்ஸன் வார்த்தை வசந்த காலத்தைக் குறிக்கும் பெண் கடவுளின் பெயர் என்றும் அறியப்படுகிறது.

ஈஸ்டர் பண்டிகை யூதர்கள் கொண்டாடிய பாஸ்கா (எபிரேய மொழியில் 'பெசெக்' **(Pesech)** கிரேக்க மொழியில் பாஸ்கா **(Pascha)** விழாவின் போது கொண்டாடப்படுகிறது. காரணம்,இயேசுவின் பாடுகள் அவரது சிலுவை மரணம் மற்றும் உயிர்ப்பு ஆகிய அனைத்து நிகழ்வுகளும் யூதர்கள் கொண்டாடிய பாஸ்கா விழாக் காலத்தில் நிகழ்ந்தன.

தொடக்கக்காலத்தில் யூதக் கிறிஸ்தவர்கள் யூதர்களின் பாஸ்கா நோன்பு முடிந்த மறுநாள், அதாவது யூதர்களின் வழிபாட்டு பஞ்சாக்கத்தின் முதல் மாதமாகிய நிசான் மாதம் 14ஆம் நாள் கொண்டாடினர். அவர்களைப் பொறுத்தவரை, ஈஸ்டர் பண்டிகை ஞாயிற்றுக்கிழமையன்றுதான் கொண்டாடப்பட வேண்டும் என்கிற அவசியமில்லை. இரண்டாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் சில பிற இனக் கிறிஸ்தவர்கள் யூதர்களின் நிசான் மாதத்தின் 14ஆம் நாளுக்குப் பின் (அன்று மாலை சூரியன் மறையும் நேரத்தில்தான் யூதர்கள் பாஸ்கா செம்மறி ஆட்டைக் கொன்று பாஸ்கா உணவைத் தயாரித்து உண்பர்; அதைத் தொடர்ந்து ஏழு நாள்கள் புளியாத அப்பத்தை உண்டு பாஸ்கா் விழாவை (அல்லது புளியாத அப்பத் திருவிழாவை கொண்டாடுவர்) வரும் ஞாயிற்றுக்கிழமையில் ஈஸ்டர் கொண்டாடத் தொடங்கினர். அந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையன்று (பெரிய வெள்ளிக்கிழமை) இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டதை நினைவுகூர்ந்தனர்.

சில கிறிஸ்தவர்கள் நிசான் மாதம் 14ஆம் நாள் ஈஸ்டர் விழாவைக் கொண்டாட விரும்பினர். அவர்களை கி.பி. 197ஆம் ஆண்டு திருத்தந்தை முதலாம் விக்டர் திருச்சபையிலிருந்து விலக்கினார். கி.பி. நான்காம் நூற்றாண்டில், உரோமைப் பேரரசர் கான்ஸ்டண்டைன் நிசான் மாதம் 14ஆம் நாளுக்குப்பின் வரும் ஞாயிறன்று ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டுமென்கிற சட்டத்தை பிரகடனம் செய்தார்.கி.பி. 324ஆம் ஆண்டில் நிசேயாவில் நடந்த திருச்சபையின் பொதுச் சங்கத்தில் எல்லா இடங்களிலும் ஈஸ்டர் ஒரே ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு ஞாயிற்றுக்கிழமையை ஈஸ்டர் நாளாக திருச்சபை அறிவித்தது.

இப்பொழுது ஈஸ்டர் எப்போது கொண்டாடப்படுகிறது? ஆண்டில் இருமுறை சூரியன் நில நடுக்கோட்டைக் கடக்கும். அந்த இரண்டு நாள்களில் இரவும் பகலும் சமமான நேரம் (12 மணி நேரம்) கொண்டவையாய் இருக்கும். இந்த நிகழ்வு இலையுதிர் காலத்தில் **(Autumn)** ஒரு முறையும், வசந்த காலத்தில் **(Spring)** ஒரு

முறையும் நடக்கும். இலையுதிர் காலத்தில் செப்டம்பர் 22ஆம் நாளிலும் (சில ஆண்டுகளில் 23ஆம் நாள்), வசந்த காலத்தில் மார்ச் 20ஆம் நாளிலும் (சில ஆண்டுகளில் 21ஆம் நாள்) நடைபெறும். இந்த நிகழ்வு ஆங்கிலத்தில் **Equinox** என்று அழைக்கப்படுகிறது. வசந்த காலத்தில் மார்ச் 20ஆம் நாளில் சூரியன் நில நடுக்கோட்டைக் கடக்கும் அல்லவா! அந்த நாளுக்குப் பின் வரும் பௌர்ணமியைத் தொடர்ந்து வரும் முதல் ஞாயிறன்று ஈஸ்டர் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் மார்ச் 20க்குப் பின் பௌர்ணமி எப்ரல் மாதம் 4ஆம் நாளில்தான் வருகிறது. ஏப்ரல் 4ஆம் நாளுக்குப்பின் உடனடியாகவே ஏப்ரல் 5 ஆம் நாளில் ஞாயிறு வருகிறது. ஆகவே இந்த ஆண்டில் ஈஸ்டர் ஏப்ரல் 5ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தேதி மாறும் ஆகவேதான் ஈஸ்டர் பண்டிகை மார்ச் மாத இறுதியிலிருந்து ஏப்ரல் மாதத்தில் 3ஆம்வாரம் வரை கொண்டாடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. தேதிகள் ஆண்டாண்டு மாறலாம். ஆனால் ஞாயிற்றுக்கிழமையன்றுதான் ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டும். இயேசு வாரத்தின் முதல் நாளில், அதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமையன்றுதான் உயிர்த்தெழுந்தார் என்று புதிய ஏற்பாடு சாட்சியம் கூறுகிறது( மத் 28:1; மாற் 16:2; லூக் 24:1; யோவா 24:1;). இயேசு ஞாயிற்றுக்கிழமையன்று உயிர்த்தெழுந்தக் காரணத்தால் ஞாயிறு ஆண்டவரின் நாள் என்று அழைகக்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக ஈஸ்டர் கொண்டாடுவது குறித்து, ஒரு நிரந்தர தேதியை (கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படுவது போல!) முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, ஏப்ரல் மாதத்தில் முதல் ஞாயிறன்று ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாலாமா என்று திருச்சபை பல ஆண்டுகளாகச் சிந்தித்து வருகிறது. ஆனால் இன்னும் இது சம்பந்தமாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

---

**திருவிவிலியம்** பிரிவுகள்

*பழைய ஏற்பாடு* ← → *புதிய ஏற்பாடு*

*பழைய ஏற்பாடு*

**திருச்சட்ட நூல்கள் (5) :** தொடக்க நூல், விடுதலைப் பயணம்,லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்

**வரலாற்று நூல்கள் (16) :** யோசுவா, நீதித்தலைவர்கள், ரூத்து, 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 அரசர்கள், 2 அரசர்கள்,1 குறிப்பேடு 2 குறிப்பேடு, எஸ்ரா, நெகேமியா, எஸ்தர், தோபித்து, யுதித்து, 1 மக்கபேயர், 2 மக்கபேயர்.

**ஞான நூல்கள் (7) :** யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமை மிகுபாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்

**இறைவாக்கினர் நூல்கள் (18) :** எசாயா,எரேமியா,புலம்பல்,எசேக்கியேல்,தானியேல்,ஓசேயா, யோவேல்,ஆமோஸ்,ஒபதியா யோனா,மீக்கா,நாகூம், அபக்கூக்கு,செப்பனியா,ஆகாய்,செக்கரியா,மலாக்கி,பாரூக்கு

- E. **மேரி மோனிஷா ,** சென்னை.

*புதிய ஏற்பாடு*

**நற்செய்தி நூல்கள் (4) :**
மத்தேயு,மாற்கு,லூக்கா,யோவான்

**திருத்தூதர் பணிகள் :**
பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகள்

**பவுல் அடியாரின் திருமுகங்கள் (14) :**
உரோமையர்,1 கொரிந்தியர்,2 கொரிந்தியர்,கலாத்தியர், எபேசியர்,பிலிப்பியர்,கொலோசையர்,1 தெசலோனிக்கியர், 2 தெசலோனிக்கியர்,1 தி மொத்தேயு,2தி மொத்தேயு,தீத்து, பிலமோன் (எபிரேயர் –யாரால் எழுதப்பட்டது என்னும் கேள்விக்குத் தெளிவான விடை காண இயலவில்லை.)

**பொதுத் திருமுகங்கள் (7) :**
யாக்கோபு,1 பேதுரு,2 பேதுரு,1 யோவான், 2 யோவான்,3 யோவான்,யூதா

**திருவெளிப்பாடு :**
யோவான் என்னும் பெயருடைய தொடக்க கால மூப்பர் ஒருவராய் இருந்திருக்க வேண்டும்.

- A. **அன்ட்ரீன் வின்டா ,** பொன்னேரி.


பிறந்த நாள் வாழ்த்து!
4th HAPPY...
BIRTHDAY
12.
04.
2015
12.04.2015 அன்று நான்காவது பிறந்த நாள் காணும்
சேசுராஜ் - ஞானமுத்து, சேசுபாலன் - சிரோன்மணி
இவர்களது பேரன்
C. அந்தோணி சிரோன் பாலன்
....பல்லாண்டு வாழ வாழ்த்தும்
அன்பு உள்ளங்கள்...
பெற்றோர்:
J. சித்திரை சகாய ராஜா - C. திருக்கல்யாணி
( பாலன் டிராவல்ஸ் )
ஞானபெற்றோர் :
V. அருள் ராஜ் -A. மரியசாந்தி
மற்றும்
உற்றார் உறவினர்கள்


3rd HAPPY...
BIRTHDAY
12.05.2015 அன்று
மூன்றாவது பிறந்த நாள் காணும்
சேசுராஜ் - ஞானமுத்து, சேசுபாலன் - சிரோன்மணி
இவர்களது பேரன் ...
C. அந்தோணி சூர்ய பாலன்
....பல்லாண்டு வாழ வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்...
பெற்றோர் :
J. சித்திரை சகாய ராஜா
(பாலன் டிராவல்ஸ்)
C. திருக்கல்யாணி
ஞானப்பெற்றோர் :
R. சிம்சன் ராஜா D.M.E.,
மரிய விஷாலினி B.COM.,ICWA
மற்றும் உற்றார் உறவினர்கள்



நன்றி! நன்றி! நன்றி!

# A.V.M.இல்லத் திருமண விழா





மணமக்கள் :

D.ஜோஸ் டால்டன், B.C.A., M.B.A.,

A.சகாய லீன் நர்மதா, M.Sc., B.Ed.,

திருமண விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும் சென்னையில்
நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கும்
நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பெற்றோர் :

D.தாசன் – D.ஜோஸ்பின்மேரி தாசன்

அண்ணன் – அண்ணி :

D.வில்சன் ராபின்ராஜா, B.A.,
W.ஜார்லின் பெமிலா, M.A.,

குட்டீஸ் :

W.கெவின் ரென்சி,
W.ஹர்சினி ரென்சி

A.V.M. GROUPS - 94442 16566 A.V.M. STORES - 2792 5254

A.V.M. HARDWARES - 94445 02849 MATHA STORES - 27925632

A.V.M. WATER SUPPLY - 2792 5698

கவரப்பேட்டை, சென்னை.

மற்றும் உற்றார் உறவினர்கள், பொத்தக்காலன்விளை

ALLDAY.RU

# உறவுகள் உயிர்க்கட்டும்

உறவுகள் உயிர்க்க இன்றியமையாத பண்புகள்

1.நிறை-குறைகளோடு பிறரை ஏற்றுக்கொள்ளுதல் :-

விவிலியத்தில் பிறரை நிறை-குறைகளோடு ஏற்றுக்கொண்டு உறவுகளை உயிர்க்கச் செய்ததன் பெருமை அன்னை மரியாவையேச் சாரும். கானாவூர் திருமண வீட்டில் மகிழ்ச்சியின் ஊற்றான திராட்சை இரசம் குன்றிப்போக, அந்த திருமண வீட்டாரின் குறைபாட்டை ஏற்றுக்கொண்டார் (யோவா 2:3). அவ்வாறே அக்குறைபாட்டினை ஏற்றுக்கொண்டதன் காரத்தினால், அதனை களைவதற்கு தன் மகனிடம் விடாது பரிந்துரைக்கின்றார். மூன்று ஆண்டுகள் தம் மகனோடு உண்டு, உரையாடி,உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, அவரின் உள்ளார்ந்த அன்பை அனுபவித்த சீடர்கள் அவருடைய நெருக்கடியான நேரங்களில் ஓடி ஒளிந்துக் கொண்ட அவர்களின் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டார். நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த மனிதனை எனக்குத் தெரியாது, சொல்லி சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கிய பேதுருவின் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டார் (மாற் 14:71). இன்னும் தொடர்ச்சியாக இயேசுவின் சீடர்களையும், பேதுருவையும் தன்னுடைய அரவணைக்கின்ற, ஏற்றுக்கொள்கின்ற போர்வைக்குள் அமர்த்தி உறவுகள் உயிர்க்க முன்னோடியாக திகழ்கின்றார் (தி.ப 1:14). நாமும் பிறரை நிறை-குறைகளோடு ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கின்றார்.

2. மனதார மன்னித்தல் :-

தந்தை இறைவனிடம் தன்னுடைய சீடர்கள் வேண்டுவதற்காக கற்றுக்கொடுத்த இறைவேண்டலில் கூட மன்னிப்பின் முக்கியத்துவத்தை பின்வருமாறு உணர்த்துகின்றார் :"எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத் 6:12). இதன் நீட்சியாக மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்,(மத் 6:14-15) என்று இயேசு எடுத்துரைப்பதை நாம் பார்க்க முடிகின்றது. மன்னிப்பின் நற்செய்தி என்று கருதப்படுகின்ற லூக்கா நற்செய்தி முழுவதும் மன்னிப்பிற்கான மகத்தான செயல்கள் இழையோடிருப்பதைக் காணமுடிகின்றது. காணாமற்போன ஆடு பற்றிய உமையிலும் (லூக் 15:1-7), காணாமற்போன திராக்மா உவமையிலும் (லூக் 15:8-10) மற்றும் காணாமற்போன மகன் உவமையிலும் (லூக் 15:11-32) மன்னிப்பிற்கான கருத்துக்கள் நிறைந்துள்ளதை நாம் பார்க்க முடிகின்றது. இயேசு தன்னுடைய மன்னிப்பின் உச்சக்கட்டமாக சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் கூட, "தந்தையே இவர்களை மன்னியும்: ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை", (லூக் 23:34) என்று சொல்வதைப் பார்க்க முடிகின்றது. இன்றும் இயேசுவைப் போன்று நம்முடைய குடும்ப உறவுகளில் தலைமுறை தலைமுறையாக நீடித்துக் கொண்டிருக்கின்ற முன்விரோதங்களையும் களைவதற்கு மன்னிப்பு மிகவும் அவசியமாகின்றது.

3. உறவுகள் சிறக்க அதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல் :-

உறவுகளை உயிர்ப்பு கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளுள் நிறைவானதும், அவசியமானதும் அதற்கான முயற்சிகளையும், முன்னெடுப்புகளையும் செய்தல். நம் நெருங்கிய உறவினர்களின் பிறந்தநாள், நாமவிழா மற்றும் திருமணவிழா நாட்களை நினைவிற் கொண்டு வாழ்த்து அட்டைகளை பரிமாறி உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளலாம். நம் சொந்தங்களின் மங்களகரமான நிகழ்வுகளில் நம்முடைய உடல் உழைப்பையும், உடனிருப்பையும் கொடுத்து நம் பங்களிப்பை கொடுக்கலாம். குறைந்தது மாதம் ஒருமுறையாவது அலைபேசியில் உறவுகளோடு

தொடர்பு கொண்டு நலம் விசாரிக்கலாம். மனதில் சின்ன சின்ன மனத்தாங்கல்களும், கசப்பான அனுபவங்களும் உறவுகளில் ஏற்படுகின்ற போது உடனே சம்பந்தப்பட்ட நபரை நேரில் சென்று சந்தித்து, அவரோடு மனம்விட்டு பேசலாம். வருடத்திற்கு ஒருமுறையாவது நம் சொந்தங்களோடு சேர்ந்து உறவைப் புதுப்பிக்க இன்ப உலா செல்லலாம்.

உறவே மனிதம் : உறவே புனிதம் நாம் வழிபடுகின்ற தெய்வம் தன்னிலே உறவு கொள்ள துடிப்பவர். அறுத்தெறிந்த உறவை சீரமைக்க, சிதைந்த இறைச்சாயலுக்கு உருக்கொடுக்க தன் ஒரே மகனையே அளிக்க முன்வந்தவர். உறவுக்காக ஏங்குகின்ற உள்ளங்களில், அவரின் உறவை கண்டு கொண்டு உறவிற்கு உயிரோட்டமளிக்க, பிறரை நிறை–குறைகளோடு ஏற்றுக்கொள்ள, மனதரா மன்னிக்க, அதற்கான முயற்சிகளையும், முன்னெடுப்புகளையும் செய்ய இக்கட்டுரை நமக்கு அறைகூவல் விடுக்கின்றது. நம்முடைய உறவுகள் உயிர்க்கட்டும். உயிர்த்த இயேசுவின் உறவுப்பரிமாற்றமும், உணர்வுப் பரிமாற்றமும் நம் குடும்பங்களிலும் நடைபெறட்டும். நம் தெய்வம் வாழகின்ற இப்பூமி உறவுமயமாகட்டும்.

– திருத்தொண்டர்.கு.ராசன், பொற்பை.

## பொற்பையின் சிறப்பு

மல்லிகைக்கு வாசனை சிறப்பு
சொல்லுக்கு பொருள் சிறப்பு
பள்ளிக்கு மாணவர் சிறப்பு
புள்ளிக்கு கோலம் சிறப்பு
விளையாட்டுக்குக் கில்லி சிறப்பு
செல்லிக்கு கவிதை சிறப்பு
அல்லிக்கு இதழ்கள் சிறப்பு
பொற்பைக்கு திருக்கல்யாணத்
தாயின் திருத்தலம் சிறப்பு

- **டே.கீர்த்திகா,** வெள்ளக்கோவில்

## பெண்

பெண்ணே, வாழ்க்கை
ஒரு போராட்டம்
அதை எதிர் கொள்
நீ கலையாக இரு ரசிப்பார்கள்
நீ காவியமாக இரு படிப்பார்கள்
நீ கோழையாய்
மட்டும் இருந்துவிடாதே
கொன்றே விடுவார்கள்
நீ சாகப் பிறந்தவள் அல்ல
சாதிக்க பிறந்தவள்
வாழ்க்கை ஒரு படகு
அதை கரையேற்றுவோம்.

- D. **அந்தோணி ஜெர்லின் ,** பொத்தக்காலன்விளை.

## எம் தாயே

அம்மா என்றழைப்பேன் அன்பினால் எம் தாயே!
ஆருத ஆற்றலாய் ஆசீரளிக்கும் எம் தாயே!
இறை இயேசுவின் இரக்கத்தை இறைஞ்சும் எம் தாயே!
ஈடேற்றம் கண்டு வாழ வரமருளுகின்ற எம் தாயே!
உண்மைக்கு உண்மையான உன்னதரை உருவாக்கிய எம் தாயே!
ஊர் கூடி ஊர்வலமாய் வந்த எம் ஊழ்வினை நீக்கும் எம் தாயே!
எத்திசைக்கும் எழுந்து வந்து எழிலாகக் காட்சி தரும் எம் தாயே!
ஏந்திய ஏசுவால் ஏற்றமிகு வாழ்வு தரும் எம் தாயே!
ஐயம் தீர்த்து ஐயன் யேசுவின் ஐஸ்வர்யமே எம் தாயே!
ஒளியாக, ஒயிலாக, ஒளிர்ந்த புத்தாடைக்குள்ளே ஒளிதரும் எம் தாயே!
ஓங்கார இசையோடு ஓடோடி வந்து தாழ்பணிந்தோம் எம் தாயே!
ஔவை மொழியாய் அக மகிழ வரமருள் பொழிவாய் எம் தாயே!

- Y.V. **மெர்ஸி அமலி ,** சென்னை.

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வான்
– யோவான் 11.25

# நினைவு அஞ்சலி



**சூ. அந்தோணி தாசன் நாடார்**
**இறப்பு : 11.04.2014**

**அ. ஞானம்மாள்**
**இறப்பு : 18.02.2012**

## என்றும் உங்கள் நினைவில் வாழும்...

**மகன் :** A.மரிய ஜோசப் - செல்வி
A.ஜேம்ஸ் சாலமோன் - ஜான்சி ராணி
A.சிலுவை தங்கம் - கலையரசி
A.ஞானராஜ் - வளர்மதி
A.சேசுராஜன் - இனிகோ


**மகள் :**
A.அலீஸ் ஞான ஜோதி மலர்
A.கிறிஸ்டி

மற்றும் உற்றார் உறவினர்கள்

பொத்தக்காலன்விளை.

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வான்
– யோவான் 11.25

# நினைவு அஞ்சலி





## Y.அந்தோணி சவரிமுத்து நாடார்
## A. புஷ்பம் அம்மாள்

**என்றும் உங்கள்**
**நினைவில் வாழும்...**

**மகன் : A. சிலுவை பிரகாசம்**

**மருமகள் : J. ஜோஸ்பின் அருள்சீலி**

**பேத்தி : S.J. அனி பெல்சிட்டாள்**

**மற்றும் உற்றார் உறவினர்கள்**

பொத்தக்காலன்விளை.

# பின் பற்றலாமே!

அன்புள்ள சகோதரிகளே!

அன்பு, பாசம், நேசம், மரியாதை என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளாகி விட்ட இந்த நாட்களிலே தன் கணவரை இழந்த பிறகும் தன் மாமியாரைப் பின் தொடர்ந்து சென்று வாழ்ந்த ரூத்தின் வாழ்க்கையை முன் மாதிரியாகப் பின் பற்றலாமே!

**உறவு :-**

அந்நிய தேசத்துப் பெண்ணான ரூத் அந்த நாட்டு பாரம்பரியங்களில் ஊறிப் போனவள். திருமண உறவால் மெய்யான தேவனைப் பின்பற்றி குடும்பத்தோடு ஐக்கியமாய் வாழ்ந்த ரூத் தன் கணவனின் மரணத்தால் இந்த பந்தம் முறிந்தாலும், கடவுளின் உறவு முறிந்து விடக்கூடாது என குடும்ப பாசத்தோடு மாமியார் நகோமியைப் பின் தொடர்ந்து வாழ்ந்த ரூத் உண்மையிலேயே பெண் இனத்தார் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியவள் என்பதை இறைவாக்கு நமக்கு எடுத்துரைக்கின்றது. தன் மகன் இறந்ததும் நகோமி தன் மருமகளை அழைத்து நீ உன் தாய்வீட்டிற்குப் போய் உன் குடும்பத்தாரோடு சேர்ந்து சந்தோசமாக இல்வாழ்க்கையை நடத்துவாயாக என முத்தமிட்டு வாழ்த்தி அனுப்புகிறாள்.

**அன்பு :-**

ஆனால் ரூத் தன் மாமியாரை மிகவும் அன்பு செய்தால் அவள் நினைத்திருந்தால் தன் ஒரே உறவான மாமியார் நகோமியை விட்டுவிட்டுத் தன் சொந்த மண்ணிற்குச் சென்று நலமுடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. நீ என்னோடு வருவது உனக்கு ஆதாயமற்ற செயல் என்று மாமியார் நகோமி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அவளை அன்பு செய்த காரணத்தால், மாமியாரை விட்டுப் பிரியாமல் தன் ஒரே உறவான மாமியார் நகோமியோடு பின் தொடர்ந்து செல்கின்றாள்.

**வேண்டல் :- ரூத் 1-16,17**

உம்மோடு வராமல் உம்மை விட்டுப் பிரிந்து போகும் படி என்னை நீர் வற்புறுத்த வேண்டாம். நீர் செல்லும் இடத்திற்கே நானும் வருவேன். உமது இல்லமே எனது இல்லம். உம்முடைய இனமே எனது இனம். உம்முடைய தெய்வமே எனது தெய்வம். நீர் எங்கே இறப்பீரோ நானும் அங்கேயே இறப்பேன். அஙகேதான் என் கல்லறையும் இருக்கும். சாவிலும் உம்மைவிட்டு பிரியேன். அப்படிப் பிரிந்தால் ஆண்டவர் என்னைத் தண்டிப்பாராக என்றார். இந்த ரூத்தைப் போன்று இன்று நாம் கூறமுடியுமா? நாமும் நம்முடைய மாமியாரை அன்பு செய்யலாமே! ரூத் அன்பு செய்து உறவை வளர்த்துக் கொண்டாள். ஆண்டவரின் ஆசீரை முழுமையாகப் பெற்றாள்.

இளமையின் செழிப்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்பு சகோதரிகளே! இன்றைய நாட்களில் கணவன் தன் மீது காட்டும் அன்பை பயன்படுத்தி மாமனார், மாமியாரை வீட்டை விட்டு விரட்டுவதும் அவர்களை அலட்சியப்படுத்தி உணவு கொடுக்காமல் தெருத் தெருவாக அலைய வைப்பதும் சரிவர பராமரிக்காமல் விட்டு விடுவது ஆண்டவர் பார்வையில் சின மூட்டக்கூடியது. ஆண்டவரே கோபப்பட்டு உங்களைத் தண்டிக்கக் கூடிய செயல் என்பதை சகோதரிகளே! மறந்து விடாதீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களும்,உங்கள்

செயலும் தான் முன்மாதிரி என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் ஆண்டவருடைய சினம் 4 தலைமுறைகள் வரையிலும் பாதிக்கும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

உங்கள் பிள்ளைகள் நல்வழியில் நடக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் முதலில் உங்களையும், உங்கள் செயல்களையும் மாற்றிக் கொள்ளுங்கள்.தன் மாமியாரைப் பின்பற்றி அன்பு செய்து வாழ்ந்த ரூத் ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்று வாழ்ந்தது போல சகோதரிகளே! உங்கள் மாமனார், மாமியாரையும் வயதான பெற்றோரையும் ஆண்டவருக்குப் பயந்து உரிய மரியாதையோடு, அன்போடுநடத்துங்கள். ஆண்டவரின் ஆசீரை நிறைவாகப் பெற்றுக் கொள்ளுங்கள். திருக்கல்யாண மாதாவின் பிள்ளைகள் என வெறுமனே மார்தட்டிக் கொள்ளாமல் அன்னையைப் போல் அன்பு செய்து வாழ முற்படுங்கள். ஆமென்.

- Y.V.R. **மெர்ஸி அமலி ,** சென்னை.

## அறிந்துக் கொள்வோம்



- **பைபிள் என்னும் வார்த்தை பிப்லியா என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது.**
- **பிப்லியா என்பதற்கு புத்தகங்கள் என்ற பொருளும் கொள்ளலாம்.**
- **விவிலியம் மொத்தம் 66 புத்தகங்களைக் கொண்டது. பழைய ஏற்பாடு –39,புதிய ஏற்பாடு –27 புத்தகங்கள்.**
- **விவிலியம் மொத்தம் 1189 அதிகாரங்களும் 31,102 வசனங்களும் உள்ளன.**
- **விவிலியத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் பர்தலோமேயு சீகன்பால்கு என்பவர் ஆவார்.**
- **பர்தலோமேயு சீகன்பால்கு அவரது நண்பர் பெஞ்சமின் லகல்ஸ் ஆகிய இருவரால் தமிழில் விவிலியம் 1782–ல் வெளியிடப்பட்டது.**

- **மெரிஷா வளன்,** இராமன்புதூர்.

## தெரிந்து கொள்ளுங்கள்

கூடு கட்டத் தெரியாத பறவை **குயில்**

மிகக் குறைந்த ஆயுள் கொண்டவை **ஈசல்**

சீனாவில் பாயும் ஒரு நதியின் பெயர் **யாரா–யாரு**

போக்குவரத்துக்கு என்று காவலர்கள் இல்லாத நாடு **நியூசிலாந்து**

மேல் நோக்கிப் பார்க்க முடியாத விலங்கு **பன்றி**

பறக்கத் தெரியாத பறவை **பென்குயின்**

நீந்தத் தெரியாத விலங்கு **ஒட்டகம்**

- **டெ. ஜெசிகா ரெஜுலின்,** வெள்ளக்கோவில்.

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| C. எல்ஸி தினேஷ் | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| S. அகஸ்டின் அனுஷா | கவரப்பேட்டை |
| W.கெவின் ரென்சி | கவரப்பேட்டை |
| A. நர்மதா ஜோஸ் | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர் செல்வகுமார் | தி.க. குன்றம் |
| சு. பவித்ரா | ரெடில்ஸ் |
| ப. ரூபா | ரெடில்ஸ் |
| சு. கீர்திகா | ரெடில்ஸ் |
| ரா. சந்தியா | ரெடில்ஸ் |
| A.தெரஸ்வின்ராஜன் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| S.மேரி லீலா | பொற்பை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| தொ.மிக்கேல்ராஜ் கலா | மணப்பாடு |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| S.சிலுவை அந்தோணி | பொற்பை |
| A.பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| P.ஸ்டெல்லாபீட்டர் | மாதர்பாக்கம் |
| J.புனிதா ஜெயக்குமார் | பொற்பை |
| G.ஜான் ஷீலா | ஏர்வாடி |
| B.சிறிய புஷ்பம் | பொற்பை |
| S.பெலிக்ஸ் ஓயிட் | சென்னை |
| F.ஜெனபா ராணி | சென்னை |
| D.அந்தோணி ஏசுதாசன் | பொற்பை |
| P.புஷ்பமணி இராஜேந்திரன் | நெடுங்குளம் |
| I.அந்தோணி முத்து | அழகப்பபுரம் |
| S.ஜோஸ் பிரகாஷ் | பொள்ளாச்சி |
| மெரின்வளன் | நாகர்கோவில் |
| மெரிா வளன் | நாகர்கோவில் |
| L.ஜாய்ஸ்ஆபிரகாம் | திருச்சி |
| V.டெல்பின் | பொன்னேரி |
| A.அன்ரின்வின்டா | பொன்னேரி |
| E.மோனிஷா | சென்னை |
| M.லிவிங்ஸ்டன் | பொற்பை |
| M.மரிய எப்சி | பொற்பை |
| M.லியோன் | பொற்பை |
| A.அந்தோனி ஷைனி | பொற்பை |
| A.மேரி ஷாலினி | பொற்பை |
| A.மரிய லிட்வின் | அடைக்கலாபுரம் |
| A.மரிய மெர்லின் | அடைக்கலாபுரம் |
| J.நிதர்சன் | அடைக்கலாபுரம் |
| J.சுதா ராஜா | திருவான்மியூர் |
| J.சிலுவைக்கனி | திருவான்மியூர் |
| J.மரிய நிகிதா | அடைக்கலாபுரம் |
| J.மைக்கில் நிவேதா | அடைக்கலாபுரம் |
| E.ஜெயசீலி பாத்திமா | தூத்துக்குடி |
| S.மரிய செல்லம்மாள் | பொற்பை |
| A.கரோலின் சிறுமலர் | கொழுந்தட்டு |
| S.G.மேரி சரோஜா | சென்னை |
| J.சேவியர்அஜித் ஜேசுதுரை | சென்னை |
| K.வினோவா | மணப்பாடு |
| X.ஜவஹர் ஜோர்டின் | ராஜாக்கமங்கலம் |
| A.கலை அரசி அந்தோணிமுத்து | கன்னியாகுமரி |
| F.அந்தோணி குணசீலி | தாராபுரம் |
| S.யாகப்பராஜ் டேவிட் | கட்டாரி மங்கலம் |
| J.ஜோஸ் ஜெரின் | பொற்பை |
| A.ரகு சுஜா | சென்னை |
| F.தேவசகாயம் | திருக்குழன்றம் |
| J.சரோன் அருள்ராஜ் | நாகர்கோவில் |
| G.பொன்மேரி கபிரியேல் | கும்மிடிபூண்டி |
| E.அகஸ்டா | பொற்பை |
| E.சகாய டோம்னிக் | பொற்பை |
| E.ஜாண் மேரி | பொற்பை |
| M.டேவிட் தேவராஜன் | வெள்ளக்கோவில் |
| P.சந்தனத் திரவியம் | பொற்பை |
| A.R.வியான்ஜெய் போனேஷா | திருச்செந்தூர் |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1.ரூபன்
2.லேவிகுலம்
3.நக்சோன்
4.எலயாசர்
5.நாசீர்
6.ஒன்றரை கிலோ
7.நூற்றுப் பதினைந்துகிராம்
8.பெதாசூர்
9.பகியேல்
10.அகிரா
11. இருபத்தி நான்கு
12. 25 வயது முதல்
13. மன்னாவும்
14. இறைச்சி
15. எழுபது
16. எல்தாது,மேதாது
17. மோசே
18. ஏழு நாட்கள்
19. காலேபு
20. எசுக்கோல்

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஏப்ரல் 2015

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | | எசா 50:4-3 | மாற் 26:14-25 |
| 2. | புனித வியாழன் | விப.12:1-8,11-14 1கொரி 11:23-26 | யோவா 13:1-15 |
| 3. | புனித வெள்ளி | எசா 52:13-53:12,எபி,4:14-16,5:7-9 | யோவா 18:1-19,42 |
| 4. | புனித சனி | தொ.நூ 1:1-2:2 எசே 36:16-28 | மாற் 16:1-7 |
| 5. | உயிர்ப்பு பெருவிழா | திப. 10:34,37-43 | |
| | | கொலே 3:1-4 | யோவா 20:1-9 |
| 6. | | தி.பணி 2:14,22-33 | மத்28:8-15 |
| 7. | | தி.ப 2:36,41 | யோவா 20:11-18 |
| 8. | | தி.பணி 3:1-10 | லூக் 24:13-35 |
| 9. | | திப.3:11-28 | லூக். 24:35-48 |
| 10. | | திப.4:1-12 | யோவா 21:1-14 |
| 11. | புனித ஸ்தனிஸ்லாஸ் | திப. 4:13-21 | மாற் 16:9-15 |
| 12. | பாஸ்கா ஞாயிறு | திப. 4:32-35 | |
| | | 1யோவா5:1-6 | யோவா 20:19-31 |
| 13. | புனித மார்ட்டின்1 | திப. 4:23-31 | யோவா 3:1-8 |
| 14. | | திப.4:32-37 | யோவா 3:7-15 |
| 15. | வண. தமியான் | திப.5:17-26 | யோவா 3:16-21 |
| 16. | புனித பெர்னதெத் | திப. 5:27-33 | யோவா. 3:31-36 |
| 17. | | திப. 5:34-42 | யோவா 6:1-15 |
| 18. | | திப.6:1-7 | யோவா 6:16-21 |
| 19. | பாஸ்கா ஞாயிறு 2 | திப. 3:13-15,17 | |
| | | 1யோவா 2:1-5 | லூக் 24:35-48 |
| 20. | புனித ஆக்னஸ் | திப. 6:8-15 | யோவா. 6:22-29 |
| 21. | புனித ஆன்ஸேலம் | திப.7:51-8:10 | யோவா 6:30-35 |
| 22. | | திப. 8:1-8 | யோவா 6:35-40 |
| 23. | புனித ஜார்ஜ் | திப. 8:26-40 | யோவா 6:44-51 |
| 24. | | திப. 9:1-20 | யோவா 6:52-59 |
| 25. | புனித மாற்கு | 1பேதுரு5:5-14 | மாற்கு 16:15-20 |
| 26. | பாஸ்கா ஞாயிறு | திப. 4:8-12 | |
| | | யோவா 3:1-2 | யோவா 10:11-18 |
| 27. | | திப. 11:1-18 | யோவா 10:1-10 |
| 28. | | திப. 11:19-26 | யோவா 10:22-30 |
| 29. | புனித சியன்னா கத்ரீன் | திப. 12:24-13:5 | யோவா 12:44-50 |
| 30. | புனித ஐந்தாம் பயஸ் | திப. 13:13-25 | யோவா 13:16-20 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : எண்ணிக்கை நூல் : அதிகாரம்14முதல் 36 வரை**

1. இஸ்ரயேல் மக்கள் அனைவரும் யாருக்கு எதிராக முறுமுறுத்தனர்?

2.ஆண்டவர் சினங் கொள்ள தாமதிப்பவர்................. காட்டுவதில் அளவு கடந்தவர்

3. ஓய்வு நாளில் ஒரு மனிதன் என்ன செய்து கொண்டிருப்பதை கண்டனர்?

4. ரூபன் வழி வந்த எலியாபு புதல்வர்கள் யார்?

5. ஆண்டவரிடமிருந்து நெருப்பு புறப்பட்டுவந்து தூபம்காட்டிய எத்தனை மனிதரை விழுங்கி விட்டது?

6. ஆரோனின் கோல் துளிர்த்து பூத்து எந்த பழங்களைத் தாங்கி இருந்தது?

7. காதேசியிலிருந்து மோசே எந்த மன்னனிடம் தூதரை அனுப்பினார்?

8 .இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரிடம் வாதாடிய இடம் எது?

9. இஸ்ரேல் அத்தாரிம் வழியாக வருவதை கேள்வியுற்ற மன்னன் யார்?

10. மோவாபிய மன்னன் சிப்போர் மகன் யார்?

11. யாக்கோபுக்கு எதிரான................. எதுவுமில்லை.

12. வேற்றினங்களில் முதன்மையானவன் யார்?

13. எலயாசரின் புதல்வன் யார்?

14. ................ இஸ்ரயேலின் தலைமகன்.

15. மனாசே குடும்பங்களைச் சார்ந்தவர் யார்?

16. நூன் புதல்வன் யார்?

17. முதல் மாதத்தின் பதினான்காம் நாள் ஆண்டவரின் ..................

18. ஆண்டவருக்காக யாரை பழி வாங்குமாறு மோசே மக்களிடம் கூறினார்?

19. படைவீரர் சூறையாடிய கொள்ளைப் பொருளில் மீந்திருந்த ஆடுகள் எத்தனை?

20. எபுன்னேயின் புதல்வன் யார்?

21. மோசே கிலயாதை யாருக்கு கொடுத்தார்?

22. ஆரோன் இறந்தபோது அவர் வயது என்ன?

23. எப்ராயிம் புதல்வர் குலத்திலிருந்து வரும் தலைவன் யார்?

24. நீங்கள் வாழும் நாட்டை நீங்கள் என்ன செய்ய கூடாது?

25. செலோபு காதின் புதல்வியர் யார்?

- **P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.03.2015**

**அடுத்த இதழ்**

**மே வணக்க மாத சிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது.**
**இவைகளைப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**
**மேலும் விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து**

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-04-2015**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.மாலை 4.00மணிக்கும் திருப்பலி நடைபெறும்.மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்
- மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.

  மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல் மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |


முதற்சனி சப்பர பவனி
சாலமோன் கிராஃபிக்ஸ்,திசை 9788675143